2 அணா

மு. கருணாநிதி

முரசு 1 | சென்னை | 17 — 12 — 54 | வெள்ளி | ஒலி 38

அதோ தெருவிலே பிச்சையெடுத்துக் கொண்டிருக்கிருளே; அவள் யார் தெரியுமா? "அவள் பரம்பரைப் பிச்சைக்காரி யல்ல; பணக்காரி யாகத் தான் வாழ்ந்தாள்- காலத்தின் சுழற்சியால் இந்தக் கதிக்கு ஆளாகி விட்டாள்" என்று அவளுடைய பழைய கதையைச் சொல்லி உங்கள்பொறுமையை சோதிக்கப் போகிறேன் என்று எண்ணுகிறீர்கள். அவள் பரம்பரை பிச்சைக்காரியேதான், அதாவது அவளது பாட்டிகூட ஒரு பிச்சைக்காரிதான்! நீங்கள் பார்க்கிற இந்தப் பிச்சைக்காரிக்கு வயது என்ன இருக்கும் என்று நினைக்கிறீர்கள்? சுமார் நாற்பது இருக்கும் என்று கூறுகிறீர்கள் அல்லவா? அல்ல அல்ல; சரியாகவே சொல்லுகிறேனே; அவள் வயது முப்பத்தைந்துதான்! ஆனால் அப்படி மதிக்கத் தோன்ருது, நாற்பது ஐம்பதுதான் மதிக்கத் தோன்றும். இந்தக் காலத்தில் ஐம்பது அறுபது ஆனதுகள் பன்னீராட்டைப் பிராயத்து பருவச் சிட்டுகள் போல பற்களைப் பூட்டிக்கொண்டு, பவுடரால் முகப் பள்ளங்களை மூடிக்கொண்டு சாயத்தால் கோவை இதழும், மையால் பிறைப் புருவமும் அமைத்துக்கொண்டு நாகரிகத்தின் எவரெஸ்டை எட்டிப்பிடித்து எக்களிக்கும் காட்சிகளை நாம் காண்கிருேம். இந்த ஏழைப் பிச்சைக்காரி, அப்படியெல்லாம் தன்னுடைய வயதை மாற்றிக் கொள்ள விரும்பவில்லை. விரும்பிலுைம் பணமில்லை — ஆகையினுல், பருவக் காற்ருல் படிந்த முதுமைத் தூசிகளை மேனியிலே சுமந்தவளாய் அவள் திருவாரூர் தெருவிலே அலைந்து கொண்டிருக்கிருள்.

வீட்டுக்கு வீடு வாயிலிலே நின்று கரகரத்த குரலிலே பாடுகிருளே; அந்தப் பாட்டு என்ன பாட்டு என்று புரிகிறதா? புரியாவிட்டால் என்னைக் கேளுங்கள் சொல்லுகிறேன்.

"ஏற்பதிகழ்ச்சியென்ற
எங்கள் ஔவைப்பாட்டிதான்
ஐயமிட்டுண் என்று பாடி
யிருக்காளே!"
"பிச்சைப்புகினும் கற்கை
நன்றே
எச்சில் இலையாவதுபோடுதல்
நன்றே!"

இப்படி வசனத்தையே, அவள் கண்டுபிடித்த புதிய தோர் ராகத்திலே தேவைப்பட்ட பிர்க்காக்களைப் போட்டுக் கொண்டு வீட்டுக்குத் தகுந்தாற்போல பாடுகிருள்.

அவளைப்பற்றி உனக்கென்ன இவ்வளவு விபரம் புரிகிறது என்று என்னைக் கேட்கிறீர்களா? ஒருநாள் எங்கள் வீட்டில் இவளது சங்கீதக் குரல் கேட்டது. அவள் யார் என்று தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆசையால் பல நாள் காத்திருந்த நான், அன்றைய தினம் அவளது வரலாற்றைக் கேட்க ஆரம்பித்தேன். அவளும் ஆரம்பித்து அரைமணி நேரத்திற்குப் பிறகு முடித்தாள். அந்தக் கதையைக் கேட்ட பிறகும் அவளுக்குப் பிச்சை போடாமல் இருப்பது யாராலும் முடியாத காரியம் தான். எங்கள் வீட்டில் என் தந்தை நினைவு நாள் வேறு அன்று! அதனுல் அவளுக்கு பாயசம் வடையுடன் நல்ல சாப்பாடு கிடைத்தது. மகராஜனுயிருக்கனும் சாமி என்று வாழ்த்திவிட்டு அவள் விடை பெற்றுக் கொண்டாள்.

சாதாரண மனுஷனுயிருக்கும் போதே, சங்கடமும், சலசலப்பும் தாங்கவில்லை; இன்னும் மகராஜனுகவேற போயி மாரடிக் கொண்டு விழிக்க வேண்டுமா என்று மனதிலே நினைத்துக் கொண்டு, அவளை வழியனுப்பினேன். அந்தப் பிச்சைக்காரியின் சொந்த ஊர்- இல்லை—மன்னிக்க வேண்டும், அவள் பிறந்த ஊர் திருச்சிக்குப் பக்கத்திலேயுள்ள சிந்தாமணி என்ற பகுதி.

● 2-ம் பக்கம் பார்க்க

Best copy available

அபாக்ய.........

★1ம்-பக்கத்தொடர்ச்சி

அதனால் அவளுக்கும் அவள் தாயார் சிந்தாமணி என்றே பெயர் வைத்து விட்டாள் போலும். பிச்சைக்காரியின் வயிற்றிலே இந்த அபாக்ய சிந்தாமணி அவதரித்து நாளொரு வியாதியும், பொழுதொரு கண்டமுமாக வளர்ந்து தாய்க்கு ஒத்தாசையாகப் பிச்சையெடுக்கிற வேலையிலும் ஈடுபட்டாள். சிந்தாமணிக்குப் பத்து வயது நிரம்பிய போது, அவளுடைய தாயார் நோய் வாய்ப்பட்டாள் சிந்தாமணிப் பகுதியில்உள்ள ரோட்டுஓரத்து ஐந்தடியிலே தான் சிந்தாமணியின் தாயார்மரணத்தோடு போராடும் களம் அமைக்கப் பட்டிருந்தது.தாய்க்கு கஞ்சி காய்ச்சி ஊற்றி, தானும் வயிற்றுப் புயலை அடக்கக் கொள்ள வேண்டிய சமாளிக்க இயலாத பிரச்சனை, அந்தம் பத்து வயதும் பசலையின் தலையிலே வந்து விழுந்தது. இரண்டொரு நாட்கள் எப்படியோ கஷ்டப்பட்டு வெளியேறத் துடிக்கும் தாயாரின் மூச்சை இழுத்து நிறுத்தி, அவள் ஆயுள் அணைந்து விடாமல் அருகிருந்து பாதுகாத்தாள் சிந்தாமணி-

பிச்சைக்காரப் பெண்ணுக்குத் தாய்ப் பாசம் இருக்காதா என்ன? பிச்சைக்காரத் தாயாருக்குத்தான் மகளின் எதிர்காலத்தைப் பற்றிய ஏக்கம் பிறக்காமலிருக்க முடியுமா?—

"மகளே, இனிமேல் என்னை நம்பாதே கண்ணே! என்காலம் ஒரு வழியாக முடிந்துவிட்டது! பல் காட்டியவனுக்கெல்லாம் சம்மதப்பட்டு, பாழும் உடலை வளர்த்தேன். அதோ சாக்கடையிலே சொறிபிடித்த உடலில் எடுக்கும் எரிச்சலை அடக்க விழுந்து புரளுகிறதே நாய்; அதைப் போலவே வெறி பிடித்த நாய்கள், மனித உருவிலே என்னை நெருங்கி நாசப் படுத்தி விட்டார்கள். என் கண்ணே! நீயும் என்னைப் போல ஆகிவிடாதேயம்மா! நமது குடும்பம் பிச்சைக்காரக் குடும்பந்தான்; ஆனாலும் உனது பாட்டி, மிக கௌரவமாக வாழ்க்கை நடத்தினாள். என்னையும் பிச்சைக்காரியாக்காமல், வாழும் சமுதாயத்திலே ஒரு அங்கத்தினராக ஆக்கிவிடப் பெருமுயற்சி செய்தாள். என்னைப்படிக்க வைத்தாள், ஒரு பெரிய மனிதரின் தயவை நாடி படித்தேன். ஆனால் கண்ணே, என் தாய் கண்ணை மூடியதும், என் கண்களும் மூடப்பட்டு விட்டன. பிச்சைக்காரி மகன் தானே என்று, பள்ளிக் கூடத்து மாணவர்கள் என்னை வட்டமிட்டார்கள். எவ்வளவு அழகாக நானிருந்தால், இவர்கள் என்னை வட்டமிட வேண்டும் என்று, நான் கர்வமடைந்தேன். மாணவர்களிடம் பெரியதொரு யுத்தமே ஏற்பட வேண்டும் என் பொருட்டு, என்று எதிர்பார்த்தேன், தேன் கூட்டை நாடும் கரடிகள்போல அந்தக் காளைகள் கூடினார்கள், மெய்மறந்தேன். உணர்விழந்தேன். பெண்களுக்கு படிப்பு கூடாது என்று கூறும் பித்தர் மொழிக்கு இந்தப் பழிகாரியும் ஒரு எடுத்துக்காட்டாக ஆனேன். படித்துறையிலே ஒரு முறை வழுக்கினால். அடுத்தபடியிலே காலை அழுத்தமாக ஊன்றி தப்பிவிடலாமென்று நினைக்கக்கூட நேரமிருக்காதே! அதற்குள் குளத்தின் அடித்தளத்திற்கல்லவா போய்ச் சேரவேண்டும், அதுவும் என்னைப்போல நீந்தத் தெரியாதவர்கள் கதி? சமுதாயத்தின் பாசிபடிந்த பாழுங் குளத்திலே சருக்கி விழுந்தேன். நாயைக் குளிப்பாட்டி நடுக் கூடத்தில்சேர்க்கலாமா! என்று வசைமாரி பொழிந்தபடி, பெரியமனிதர், என்னை வீட்டை விட்டுத் துரத்தினார். தாயாரின் வேலையை மேற்கொண்டேன். பிச்சை எடுத்தேன் என் வயிற்றுக்கு! பிச்சையும்கொடுத்தேன்வாலிபர்களின் வெறிச் செயலுக்கு! இப்படி நகர்ந்த என் வாழ்விலேதான்—நட்சத்திரமே! நீ உதயமானாய்! நீயும் என்னைப்போல ஆகிவிடாமல், உன் பாட்டியைப் போல கௌரமாக, மானத்தோடு வாழம்மா!"

என்று மரண முகப்பிலே அனுபவ சுருதியோடு கலந்த சோக கீதத்தை இசைத்து விட்டு, மங்களம்பாடி தன் கச்சேரியை முடித்துக் கொண்டாள், சிந்தாமணியின் தாய்!

தாயுமற்ற அனாதையாகி விட்ட சிந்தாமணி, பிச்சைக்கார சிறுமியாக சிலநாள் அலைந்தாள். திடீரென்று அவளுக்கு ஒரு "அதிர்ஷ்டம்" அடித்தது. அனாதைச் சிறுவர்களைப் பாதுகாத்து, கல்வி வழங்கும்—ராமலிங்கசாமி குரு குலத்திலே அவளுக்கும் ஒரு இடம் கிடைத்தது. அந்தக் குரு குலத்தின் பிரதம ஆசிரியர் பழுத்த ராமலிங்க பக்தர். ராமலிங்க சிவானந்தம் என்பது அவரது பெயர், வயது ஐம்பதுக்கு மேலிருக்கும் ராமலிங்கருடைய அருட்பாக்கள் அவருக்கு மனப்பாடம். தேவார திருவாசகங்களில் அவர் புலி, 'எம்மதமும் சம்மதமே — தென்னாடுடைய சிவனே போற்றி!" என்ற வார்த்தைகளை அவர் முணுமுணுக்காத நேரமே கிடையாது, அவரது பார்வையிலே பட்ட அனாதைச் சிறுமியை அவர்தான் குருகுலத்தில் கொண்டுவந்து சேர்த்தார். சிந்தாமணியும், நன்கு கல்வி பயின்று தேர்ச்சிபெற்றாள். சிவானந்தரின் மூத்தமகன், ஜோதியானந்தம், மேல்நாட்டு படிப்பு படிப்பதற்காக அமெரிக்கா போயிருந்தான். அவன் படிப்பை முடித்துக் கொண்டு, ஊர்வந்து சேர்ந்தான். அவனது கருத்தைக் கிளறும் சந்திப்பு ஒன்று குருகுலத்திலே நிகழ்ந்தது, அதுதான், சிந்தாமணியின் சந்திப்பு-சிந்தாமணி-ஜோதியானந்தம் — இருவரும் காதலராயினர்—அந்தக் காதல் கட்டத்தை வர்ணிக்க வேண்டுமாஎன்ன? அந்தக் கட்டங்களை கண்டுகண்டு, கேட்டுக் கேட்டு அலுத்துப் போயிருக்கும் உங்களிடம், அதைவேறு நினைவு படுத்தி — பிரம்மச்சாரிகளுக்கு பெரும் வேதனையையும், பெருங்குடும்பிகளுக்கு பெரிய வேதாந்த நினைவுகளையும்உண்டு பண்ணுவானேன்!

கருணாநிதி

ஜோதியானந்தத்தின்இருதய ஜோதியாக சிந்தாமணி ஆகி விட்டாள் என்பதை அருட்பெருஞ்சோதியின் பக்தர் சிவானந்தம் கேள்விப்பட்டார்.

"எம்மதமும் சம்மதமே!" என்று முணு முணுத்த அவரது வாய்—மகனை, வசைபாட அரம்பித்தது! காதலாம் காதல்! நாயைக் கொண்டுவந்து நடு வீட்டில் வைத்தால் அது இப்படித்தான் ஆகும்—என்று கத்தினார், உண்மையிலேயே சிந்தாமணி—நாயல்ல!—

சிந்தாமணியின் தாயாரைப் பார்த்து, அவளுக்கு உதவிய பெரிய மனிதர்- "நாயைக் குளிப்பாட்டி நடுவுள்ளே வைத்தால்.." என்று திட்டினாரே, அதற்கும்- இப்போது ராமலிங்க சிவானந்தர் திட்டுவதற்கும் வித்யாசமிருக்கிறது!—

பொது மக்களிடம் புகழ் பெருவற்காக, குரு குலத்தார் அளிக்கும் பாராட்டு மாலைகளை சுமப்பதற்காக, சிவானந்தர்—சிந்தாமணிக்கு அபயம் அளித்தது என்னமோ உண்மை!

அத்றகாக அவள், தனக்கே மருமகளாக வர வேண்டுமென்று ஆசை கொண்டால்-அதை அவரால் அனுமதிக்க முடியுமா?

மகனைக் கண்டித்தார்-சிந்தாமணியைப் பற்றி அவதூறுகள் கூறினார், காதல் என்பது ஒரு போலி வார்த்தை என்பதற்கு ஆயிரமாயிரம் ஆதாரங்கள் தேடினார்.

சூடு கண்ட பூனை பாலை பாஷாணம் என்று தானப்பா கூறும் என்று ஜோதி, பதில் தந்தான். அவரோ கேட்கவில்லை. குருகுலத்திலிருந்து சிந்தாமணி விரட்டப் பட்டாள், விபச்சாரக் குற்றம் சாட்டப் பட்டு! தன்னால் ஜோதியின் குடும்பம் குலையக் கூடாது என்று எண்ணிய சிந்தாமணி, ஜோதிக்கு எவ்வளவோ எடுத்துச் சொல்லி, அவன் தன்னை மறந்து விட வேண்டும் என்று மன்றாடினாள். அவனோ கேட்கவில்லை. அவளைப் பின் தொடர்ந்தான்.

இப்படிச் சில நாட்கள், துன்பத்திலும் இன்பங் கண்டாள் அவள். ஜோதியின் தந்தை பைத்தியமாக மாறி விட்டார். மகனின் போக்கு அவர் மூளையைக் குழப்பி விட்டது.

அத்தக் குடும்பமே தத்தளித்தது - ஜோதியின் தாயாரும், ஜோதியின் சகோதரிகளும், சிந்தாமணியிடம் வந்து, தங்கள் குடும்பத்தைக் காப்பாற்ற "ஜோதியைத் திரும்பக் கொடு!" என்று "மடிப் பிச்சை" கேட்டார்கள். "குடும்பத்தலைவன் ஜோதிதான் — அவனும் போய்விட்டால், பைத்தியக்காரராகி விட்ட தந்தையுடன் எப்படியம்மா இந்த குடும்பம் நல்ல நிலைமைக்கு வரும்? எங்கள் மீது இரக்கம் காட்டம்மா—" என்று புலம்பினார்கள்.

"அனாதையாகக் கிடந்த உன்னை, ஆதரித்து. இவ்வளவு நாள் பராமரித்தவரான — உன் தந்தை போன்ற சிவானந்தருக்கு, இப்படியாவது ஒரு நன்றி காட்டக் கூடாதா?" என்று குருகுலத்துத் தோழிகள் அவளுக்குப் புத்தி கூறினர்

● 8-ம் பக்கம் பார்க்க

சேற்றில் கல்லெறியும் சாஸ்திரியார்!

★

"தென்னிந்தியாவில் ஆங்கிலம் அவசியத்திற்குமேல் வழக்கில் இருந்துவருகிறது. வீடுகளிலும் சமூக பழக்க வழக்கங்களிலும் ஆங்கிலம் அனாவசியமாக உபயோகிக்கப் பட்டு வருகிறது. இது நிற்க வேண்டும். இந்தியை நிர்வாகம். உயர்தரக் கல்வி ஆகியவற்றிற்கு உபயோகிக்க வேண்டும்.

"டில்லி சர்வகலாசாலையிலும் மற்ற சர்வகலாசாலைகளிலும் சமஸ்கிருதப்பிரிவை ஏற்படுத்த வேண்டும். கல்வித் திட்டமாறுதலில் சமஸ்கிருதத்தை பள்ளிகளிலும் கலாசாலைகளிலும் கட்டாயமாக்கச் செய்ய வேண்டும்"

டில்லி பட்டமளிப்பு விழாவில் பதஞ்சலி சாஸ்திரி 11-12-54

தலையங்கம்

சென்னை [17—12—54] வெள்ளி

குல்பாய் அல்ல ; குலேபா !

செல்வங் கொழிக்கும் சீமான் அவன். இரும்புப் பெட்டிகளிலே தங்கத்தைக் குவித்திருக்கிறான். வெள்ளிப் பேழைகளில் வைரம் வைத்திருக்கிறான். அணிமணிகள் லட்சோபலட்சம் பெறும். அத்தனையும் ஒரு பாதுகாப்பான அறையில் பூட்டி வைத்திருக்கிறான். "அவன் பலநாள் சேகரித்த செல்வக் கோபுரத்தை ஒரே நாளில் கரைத்துவிட்டு வருகிறேன், எடு கன்னக்கோலை" என்று துடித்துக் கிளம்பினான், கொள்ளைக்கார குல்பாய். குல்லுபாயின் தாய் அவனைத் தடுத்து நிறுத்தி, கன்னக்கோல் தரமுடியாது என்று கூறி, "மகனே! சீமான் வீட்டில் நீ கொள்ளையடிப்பதை நான் அனுமதிக்க முடியாது" என்று ஆத்திரமாகக் கூறினாள். குல்பாய், விழித்தான். தரமுடியுமா முடியாதா என்று தாண்டிக் குதித்தான். "நீ என்னதான் தலை கீழாக நின்றாலும் சரி; நீ சீமான்வீட்டில் திருடப் போவதை நான் அங்கீகரிக்க முடியாது." கன்னக்கோலும் தரமுடியாது என்று அவன் தாய் பிடிவாதமாக மறுத்தாள்.

ஆகா! எவ்வளவு நல்ல தாயாருக்கு, எவ்வளவு கொடியபிள்ளை பிறந்திருக்கிறது என்று நினைக்கத் தோன்றும். ஆனால்; உண்மை அதுவல்ல.

சீமான் வீட்டில் கொள்ளையடிக்க தன் மகனை தாயார் அனுப்பாமைக்குக் காரணத்தை அந்தத் தாயாரே கூறுகிறாள், கேளுங்கள்!

"சீமான்வீட்டில் நுழைந்து திரும்பும்போது அகப்பட்டுக் கொண்டால், உன்கதி என்ன ஆகும்? அப்பா, மகனே! உனக்கு வேண்டியது சீமான்வீட்டு சொத்துதானே—அதற்கு ஒருவழி நான் முன்பே வகுத்துவிட்டேன். உன் தங்கை குலேபாவின் மூலம் அந்த ஏற்பாட்டை செய்துவிட்டேன். சீமான், உன் தங்கையின் அழகில் சொக்கிப்போய்க் கிடக்கிறார். நேற்றிரவு போயிருந்தாள். ஆயிரம் கொண்டுவந்தாள், இன்னும் வரச்சொல்லியிருக்கிறார். வைரமாலை ஒன்று தருவதாகவும் வாக்களித்திருக்கிறார். இப்படி நேசம் வளருமானால், சீமான்வீட்டு சொத்துக்கு நாம்தான் அதிபதி. மெள்ள மெள்ள, அவரை, நம் வீடடுக்கே வந்து போகும்படி செய்துவிட்டால், பிறகு அவர் திருவோடு சகிதம் தானே திரும்பிச் செல்வார்! இது தெரியாமல் கன்னக்கோல் கேட்கிறாயே, முட்டாளே! கண்ணழகியாம், உன் தங்கையிருக்கும்போது கன்னக்கோல் எதற்கடா கண்ணே!"

தாயாரின் வார்த்தை கேட்டு, மகனும் மகிழ்ச்சியுற்றான். இது ஒரு கற்பனை, ஆனால், இந்தக் கற்பனை இன்றைய அரசியல் நிகழ்ச்சிக்கு நல்லதோர் எடுத்துக்காட்டாக அமைகிறது என்பதை யாரும் மறுக்கமுடியாது.

பார்லிமெண்டரி இந்தி சங்கத் தலைவர் சேத் கோவிந்ததாசும், இன்னும் பதினாறு எம். பி. க்களும் சேர்ந்து ஜனாதிபதிக்கு தந்துள்ள மகஜரில், இந்தியை தேசீய பாஷையாக ஆக்கி-ஆங்கில மொழியால் ஏற்படும் தேசீய அவமானத்தை உடனடியாக நீக்கும்படி வற்புறுத்தியுள்ளார்கள் என்ற செய்தி யாவரும் அறிந்ததே. அந்த மகஜரில்,

"இந்தி பாஷை செழிக்கவும், பரவவும், மத்ய அல்லது ராஜ்ய சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை எதுவும் போதுமானதாகவும் நியாயமானதாகவும், பொது மக்கள் பிரியத்துக்குரியதாகவும் இருந்ததா?"

என்றும் ஆத்திரத்துடன் கேட்டிருக்கிறார்கள். இந்தியை மளமளவென்று தேசீய பாஷையாக்கி தென்னாட்டார் மீது திணித்துவிட வடநாட்டிலே தீவிரமான முயற்சிகள் பல நாட்களாகவே நடைபெற்று, அது இப்போது ஒரு தீவிர கட்டத்தை அடைந்திருக்கிறது என்று கூறலாம்.

இந்தி வெறியர்களின் அவசரத்திற்குப் பதில் கூறும் வகையிலே பண்டித நேரு பேசியுள்ள கருத்துக்கள் கவனிக்கப்பட வேண்டியவையாகும்.

"இந்தி பாஷை இயற்கையாக வளர்ச்சி பெறவேண்டும். தேசீய பாஷை வளர்ச்சியைக் கோருகிறவர்கள், பாஷையை செழிக்கச்செய்ய விரும்பினால் அகராதி-சர்வவிஷய மஞ்சரி போன்ற மூலாதாரமான புத்தகங்களை உற்பத்தி செய்ய வேண்டும். **மற்ற பாஷைகளை எதிர்க்கும் எந்த முயற்சியும் இந்திப் பிரச்சாரத்திற்குக் கெடுதலாக முடியும்.**"

இவைதான் நேருவின் வாசகங்கள். முதலில் கண்ட கற்பனைக் கதையையும் நிகழ்ச்சிகளையும் ஒப்பிட்டுப் பாருங்கள்—கொள்ளைக்கார குல்பாய் உருவத்திலே நின்று கொண்டு, இந்தி வெறியர்கள் இந்தியை அவசரமாகப் புகுத்தி—வளம்பெறச் செய்து, ஆங்கிலத்தை ஒழித்து, தென்னகத்தை வசப்படுத்த வேண்டும்—தென் தேசம் இந்தி மொழிக்கு முதல் அடிமையாகவேண்டும் என்று துடிக்கிறார்கள்.

நேரு போன்றவர்களோ, குல்பாயின் தாயார் வடிவத்திலே இருந்துகொண்டு, எதிர்த்துக் கேட்பதைவிட, அடுத்துக் கெடுப்பது மேல் என்னும் நினைவோடு "இதோ பார்! இந்திப் பிரச்சாரம் என்னும் இன்பவல்லியை அனுப்புகிறேன். கொள்ளையடித்துக் கொண்டு வரும் பொருளை, இவள் பல்லைக் காட்டியே கொண்டு வருவாள்—தென்னகத்துச் சீமான், ஓட்டாண்டியாகும் வரையில் விடமாட்டாள்" என்று சூசகமாகப் பேசுகிறார்கள்.

இந்தி வெறியர்களின் போக்கை, வடநாட்டுத் தலைவர்களும், தென்னாட்டு தேசீய ஏடுகளும் கண்டிப்பதைக் காணுகிறோம்—ஆனால், அந்தக் கண்டனம்; கன்னக்கோல் தேவையில்லை என்று கூறும் கள்ளனின் தாயார் தெரிவிக்கும் கண்டனத்தைப் போன்றது தான் என்பதைத் தென்னகம் உணர்ந்திட வேண்டும்.

மாயவரத்தில் பேசிய ராஜா முத்தையா செட்டியார் அவர்கள், "ஆங்கிலம் சர்வதேச மொழியாகத் திகழ்வதாலும், அறிவைப் பெருக்கிக் கொள்ள அது ஒரு சாதனமாக விளங்குவதாலும் அதை விலக்காமல் நீடித்திருக்கச் செய்ய வேண்டும்" என்று குறிப்பிட்டிருக்கிறார். இந்தப் பேச்சு இந்தி மொழி வெறிக்கு மறைமுகமாகத் தரப்படும் மறுப்பு என்பதை நாம் மறுக்கவில்லை.

ஆனால், முத்தையா செட்டியார், கதையிலே வரும் குலேபாவின் அழகிலே மயங்கிவிடும் சீமான் இனத்தைச் சேர்ந்தவராக, ஆகிவிட நேரிடுமே என எண்ணும்போது அவரது மாயவரத்துப் பேச்செல்லாம் காற்றோடு போய்விடலாம் என்றே முடிவுகட்ட வேண்டியிருக்கிறது.

எப்படியோ, வடக்கத்திமொழிக்கு தென்னகத்திலே புதிய ஏகாதிபத்தியம் பலம் பொருந்திய அஸ்திவாரத்தோடு அமைக்கப்படுகிறது. அது, கொள்ளைக்கார குல்பாய் முறையிலே வந்தாலும், கண்ணைக்காட்டும் குலேபா மூலம் வந்தாலும், விளைவு ஒன்றுதான், சீமான் சொத்துக்கு சேதம்தான்! இந்த உண்மையைத் தென்புரத்து மக்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டுகிறோம். வெள்ளம் வருமுன் அணைபோட்டே தீரவேண்டும்.

இல்லையேல், வடக்கத்தியானின் நிரந்தர அடிமையாக மாற முறிச்சீட்டு எழுதிக்கொடுத்த மாதிரிதான்.

தென்னகமே, தமிழ்த்தரணியே! தீரர் பூமியே! நீ உன் நிலையை சிந்திக்கப் போகிறாயா, இல்லையா? உடனடியாக, உரத்தகுரல் எழுப்பு; வரட்டு மொழியாம் இந்திமொழியை எதிர்த்து! வருமுன் காப்பவனே அறிவுடையோன், அதை மறவாதே! அபாய அறிவிப்பு!

கன்னக்கோல் சகிதம், ஆபத்து வரவில்லை. அது கேட்டு களிப்படையாதே!

பழைய ஆரியமுறையிலேயே ஆபத்து வருகிறது!—மயங்காதே! எழுந்திரு!

★

எடை குறைய......

திருமதி பார்பாரா மேரி தாம்ப்ஸன் என்ற பெண்மணி கணவரோடு வாழ்ந்தபோது அவர் எடை 126 பவுண்டிலிருந்து 106 பவுண்டாகக் குறைந்துவிட்டது. அவர் கணவரைப் பிரிந்து சென்றார். எடை பழையபடி முந்திய நிலைக்குக் கூடிவிட்டது. திரும்பவும் அவர் கணவரோடு சென்று வாழ ஆரம்பித்தார். இத்தடவை அவர் எடை 104 பவுண்டாகக் கீழே இறங்கிவிட்டது. கணவனைப் பிரிந்தால் எடை கூடுமென்று மேலை நாட்டவர் முடிவுகட்டு கின்றனர்.

குரு தட்டிக் கொடுத்தார்! சீடர் எட்டி உதைக்கிறார்!

"இந்தப் பிரபஞ்சத்தில் ஆராய்ச்சி செய்வதற்கு எத்தனையோ நூல்கள் இருக்கின்றன. இனிப்புக் குறையாத இதிகாசங்கள் எத்தனை? பக்தி சொட்டும் தொண்டர்கள் வரலாறு எத்தனை? கயிலை ஆனந்தர் பற்றிய கவிதைத் தொகுப்பு எவ்வளவு? இதெல்லாமா இவர்களின் கண்ணுக்குப் புலப்படுகிறது! அதுதான் தொலையட்டும்; இருப்பதை உண்டு தெரிந்ததை எழுதியாவது காலத்தைத் தள்ளி போகட்டுமே யார் வேண்டாமென்றது? இந்த டில்லியும், காங்கிரஸ் கட்சியும் முன் ஜன்மத்தில் என்னதான் பாவம் செய்தனவோ—அது அந்த எம் பெருமானுக்குத்தான் வெளிச்சம்" என்று நம்முடன் முகம் காட்டி பேச மறுத்த பெருவாழ்வு நடத்துவோரும் நமது இதய தாகத்தை ஆதரித்துப் பேசத்தொடங்கியிருக்கிறார்கள்.

அதற்கு, நாம் காட்டுகின்ற மூல காரணங்களைக் காட்டிலும் டில்லித் தேவதை சென்னையிடம் காட்டும் அலட்சியம் விரிந்து வருவதுதான் என்பதை நாம் மறுக்கவில்லை. இயற்கையிலேயே சுவையுள்ள பாலில், சுக்குப் பொடியும் இன்ன பிற வாசனைத் திரவியங்களும் கலந்தால் எப்படியோ அப்படித்தான் பிரிவினைக்கான நமது வரலாற்றுக் காரணங்களும் அந்தப் 'பிரபு'க்கள் காட்டும் பேத உணர்ச்சிகளும்.

கருமுத்து தியாகராசர் பாண்டிய மண்டலத்தின் பெரும் பணக்காரர்களில் ஒருவர்-மில் முதலாளி—சைவப் பற்றுமிக்க தனவணிகச் சீமான்—அவர் நடத்தும் 'தமிழ் நாடு' கனபாடிகளின் கீர்த்திகூறி, அடிகளாரின் புகழ்பாடும் தினத்தாள். அந்த இதழே டில்லியின் போக்கை வன்மையாகக் கண்டித்து எழுத முன் வந்திருக்கிறது. "மத்திய அரசு பாரத நாட்டின் பொது அரசாக இல்லாமல் ஒரு தனிப்பட்ட மக்களின் அரசாக மாறிக் கோண்டு வருகிறது. இந்நிலைமை முற்றுமானால்நாட்டின் ஒற்றுமை தகர்ந்துவிடும் என்பதை நேரு உணர்வதாகத் தெரியவில்லை" என்று தலைநகர் தர்பாரை அந்த இதழ் சாடியிருக்கிறது.

பாருங்கள் டெல்லியின் பாகுபாட்டுணர்ச்சியை என்று பாரதிர முழங்கிய நேரத்திலே கூட தவக்கோலத்திலே இருந்தவர்களுக்கு இப்போதென்ன உணர்ச்சி பிரவாகம் என்று கேட்கிறீர்களா?

அண்மையிலே டில்லி அமைச்சரவையில் பல மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. புதிய மந்திரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இன்னும் சிலர் துணை அமைச்சர் பதவியிலிருந்து உயர்த்தப் பட்டிருக்கிறார்கள். நேருவின் மந்திரி சபையிலுள்ள 15பேர்களில் அறுவர் உத்திரப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள், அதில் ஒண்ணே ஒண்ணு கண்ணே, கண்ணாக தமிழர் ஒருவர் நியமிக்கப் பட்டிருக்கிறார். மந்திரிசபையின் கீழுள்ள பத்துப் பேரில் தமிழ் நாட்டவர் அறவே இல்லை. அதிலும் இருவர் உத்திரப் பிரதேசத்தைச் சேர்ந்தவர். துணை அமைச்சர் 11 பேரில் இருவரே தமிழ் நாட்டவர்கள்

சப்ரூ—உ. பி. யைச் சேர்ந்த இந்த ஆசாமியே எதிர்காலச் சட்ட அமைச்சராக நியமிக்கப் படலாமென்ற வதந்தி டில்லி வட்டாரத்தில் அன்ன நடை போடுகிறதாம்! டி. டி. கே. விலகினாலும் அந்த இடத்தை ஒரு தமிழரே நிரப்புவார் என்பது சந்தேகம்தானாம்! இந்த ஓரவஞ்சனையை யார்தான் சகித்துக் கொள்வார்கள்? வெள்ளையரைக் கேலி செய்யும் இந்த 'நல்லவர்'கள் வேல்சிற்கும், ஸ்காட்லாந்திற்கும் அந்த வெள்ளையர்கள் தனிப் பிரதிநிதித்துவம் தந்திருப்பதை மறந்துவிட்டார்கள் போலும்! பேசுவது 'ஏக இந்தியா' வாதம் — பேணுவதோ கொல்லைப்புற மாநிலங்களை! அவர்கள் வணங்குகின்ற ஆயிரம் கண்ணுடையாளுக்குத்தான் இது அடுக்குமா? ஒரு மாநிலத்தின் நிலைமையை மத்திய சர்க்காருக்கு எடுத்துச் சொல்ல ஒரு பிரதிநிதி வேண்டாமா? மக்களின் மனப்போக்கை விளக்கிச் சொல்ல ஒரு தூதுவர் தேவையில்லையா? மாட்டை விற்றாவது நாட்டரசுக்கு வரிக் கட்டுகிறோமே எங்களுக்கு விளையும் கேட்டைத் துடைத்திட வாதம் செய்ய வகையான ஆள் இல்லையே டில்லியிலே, என்று மக்கள் கேட்கமாட்டார்களா? நல்லதோர் வாய்ப்புக் கிடைத்துவிட்டது, நாட்டு மொழி இந்திதான் என்றுரைக்க சமயம் இதுதான் என்று ஒவ்வொரு உ. பி. காரனும் ஓம்காரக் கூச்சல் இடும் இந்த நேரத்தில் தென்னாட்டாரின் மன நிலையை விளக்க டில்லி

● தொடர்ச்சி 10-ம் பக்கம்

துறவோவியம்

திருவள்ளுவப் பெருந்தகையாரின் திருவுருவத்தை நாம் கண்டதில்லை. தமிழகம், தனது சரித்திரத்தையும், தன் புகழ் பாடிய பெரும் புலவர்கள் பற்றிய விபரங்களையும் தன்னகத்தே கொண்டிராத பெருங்குறையால் ஏற்பட்ட விளைவுகளில் ஒன்றுதான், திருவள்ளுவரின் உருவம் நமக்குக் கிடைக்காது போனதாகும். அவர் யாத்தளித்த திருக்குறள் நூல்தான் அவரது திருவுருவமெனக் கொள்ளவேண்டும் என்பர் பெரியோர்.

இந்நாள் போன்று அந்நாளில் விஞ்ஞானப் பெருக்கு மிகுந்திருக்குமேயாயின் ரஷ்ய மண்டலத்திலே லெனின் உடலைக் காத்திடும் செஞ்சதுக்கமொன்று நமது வள்ளுவனுருக்காக அமைக்கப்பட்டிருக்கும். அது நிற்க, இற்றை நாளில் இதுதான் வள்ளுவரின் உருவமென பரிமேலழகரின் பரம்பரையினர் எழுதிக் காட்டும் படங்கள் அனைத்தும் ஏற்றுக் கொள்ளக்கூடியன அல்ல என்பதை அறிதல் வேண்டும். பூணூல் என எண்ணிடும் வகையிலே மார்பிலே குறுக்கு அணி பூட்டிக் காட்டுகிறார்கள். தவ சிரேட்டரின் கோலத்திலே உட்காரவைத்து இவரே வள்ளுவர் எனப் பறை அடிக்கிறார்கள். சடாமுடிகள் சகிதம் வள்ளுவப் பெருந்தகையாரை வரைந்து காட்டுகிறார்கள்.

வள்ளுவர் சடாமுடிகள் வைத்திருக்கவில்லை யென்பதை வள்ளுவர் எழுதிய குறள் பாட்டே தெரிவிக்கிறது.

துறவற இயலிலே துறவின் தன்மை பற்றி அறம் போதிக்கும் அறிஞர் பெருந்தகை, மொட்டை அடித்துக்கொள்ளுதல், சடை வளர்த்துக்கொள்ளுதல் ஆகிய கோலங்கள் தீய ஒழுக்கத்தை விட்டவர்களுக்கு தேவையில்லை என்று வலியுறுத்தியிருக்கிறார்.

"மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்"

என்பது குறள். தலையை மொட்டையடித்துக் கொள்வதும், நீட்டி சடை வளர்ப்பதும், உலகத்தினால் தீயவை என்று கருதப்படும் காரியங்களை ஒழித்தவர்களுக்குத் தேவையில்லை என்பதே இதன் பொருளாகும்.

தூய்மையான துறவிகளுக்கே சடை வளர்ப்பது போன்ற வேடங்கள் தேவையில்லையென்று கூறும்போது, நல்லறமெனும் இல்லறத்திலே ஒழுக்கம் தவறாது ஈடுபட்ட உயர் தனிச் செம்மலாம் வள்ளுவர், சடைமுடிகள் வளர்த்துக் கொண்டிருந்தார் என்று சித்திரம் வரைந்துக் காட்டுவது எங்ஙனம் பொருந்தும்? என்னே ஏமாற்று வித்தை! என்னே மோசடியான செய்கை! வள்ளுவர் இவர்தான் என்று காட்டுகிற ஓவியங்கள், வள்ளுவரின் குறளையே எதிர்த்திடும் வகையில் அல்லவா அமைந்திருக்கின்றன—

இதற்கோர் நல்ல திருத்தங்காண நல்லறிவாளர்—
—தமிழ்ப்பாவாணர்—உடனே முன் வருவார்களாக!

திருமணம்

படஉலகில் பெரும் புகழ் பெற்ற 'நேஷனல் பிக்சர்ஸ்' உரிமையாளர் திரு. பி. ஏ. பெருமாள் அவர்கள் கடந்த 5-ந்தேதி வேலூரில் திருக்கோயிலூர் திருமதி மீனாட்சி அம்மை அவர்களை, வாழ்க்கைத்துணைவியாக ஏற்றுக் கொண்டார். திருமணம், சீர்திருத்த முறையில், சிறப்பாக நடைபெற்றது. பேராசிரியர் மு. வரதராசன் தலைமையில், அறிஞர் அண்ணா, அண்ணல்தங்கோ, ஏ. வி. மெய்யப்பா, 'பிரபாத்' டாக்கீஸ் கண்ணபிரான், மு. கருணாநிதி, ஆகியோரின் சொற்பொழிவுடன் நடைபெற்ற திருமண விழாவில். திரையுலக நடிக நடிகையரும், படத் தயாரிப்பாளரும், எழுத்தாளர்களும் ஏராளமாக வந்திருந்து வாழ்த்தினர்.

அடுத்த இதழில்

ரத்தக்கண்ணீர்

- விமர்சனம்

அதற்கல்ல!



இருமுகின்ற மேகங்கள், முழுவா னத்தை
இருட்டாக்கும் மழைமாதந் தன்னில்; பிச்சி
அரும்பெடுத்து வாஎன்று உனக்கு ஆணை
இட்டேனே, அதுஎதற்கு? காலங் காட்டும்
கருவியிலா சமயத்தில், விளக்கு ஏற்றும்
காலத்தை, அவ்வரும்பு வாய் விரித்துத்
தெரிவிக்கும். அதை அறியக் கேட்டேன். அன்றிச்
சிங்காரப் பின்னல்தனில் சூட அல்ல!

★ ★ ★

விண்காற்று போல்ஓடி, நல்ல எண்ணெய்
வாங்கிவரச் சொன்னேனே எதற்கு? எந்தன்
கண்ணாளர் களஞ்சென்று, பலகை மார்பில்
காயத்தைப் பெற்றிறந்த சேதி கேட்டுச்,
சண்டைக்குப் போகின்ற எனது மைந்தன்
தலைமீது எண்ணெய்வைக்க வேண்டும். இந்த
எண்ணத்தை நிறைவேற்றக் கேட்டேன். அன்றி
இனிக்கின்ற திண்பண்டம் சுடுதற் கல்ல!

★ ★ ★

கூரையிலே சாய்ந்துள்ள சுரைக்காய் தன்னைக்
கொண்டுவரச் சொன்னேனே எதற்கு? இந்த
ஊர்மக்கள்; என்பல்லை, இளஞ் சுரைக்காய்
விதையோடு ஒப்பிட்டுப் பேசு கின்றார்.
கூருள்ள வெண்முல்லை அரும்பு என்று
கூறுகிறார் என்கணவர். இதை ஒப்பிட்டுப்
பார்க்கத்தான் கொடிச்சுரைக்காய் கேட்டேன். அன்றிப்
பக்குவமாய்க் கறிசமைத்துத் தின்ன அல்ல!

★ ★ ★

முத்தமிடும் ராத்திரியில்; அதிக மாக
முதிராத வெற்றிலையைப் போடு, என்று
சத்தமிட்டுச் சொன்னேனே எதற்கு? காதற்
செய்கையிலே ஈடுபட, போதை ஊட்டும்
வித்தைஇந்த வெற்றிலைக்குத் தெரியும். இந்த
விவரத்தை உணரத்தான் உரைத்தேன். அன்றித்,
தித்திக்கும் கனிஉதட்டின் மேலே, ரத்தச்
சாயத்தை வெள்ளம்போல் பெருக்க அல்ல!

★ ★ ★

பழனிமலைத் தொடர்சென்று வருவோம் என்று
பிடிவாதம் செய்தேனே எதற்கு? அங்கே,
மழைமேகம் முத்தமிடச் சம்ம திக்கும்
முதிரமலை ஒன்றுண்டு. அதுதான், ஈந்து
அழியாத புகழ்பெற்ற குமண வேந்தன்
அரசாட்சி செய்த இடம்! அதைப்பார்க் கத்தான்,
எழுந்திடுக என்றேனே தவிர; அங்கே
இருக்கின்ற கோவிலுக்குப் போக அல்ல!

★ ★ ★

ஒருதெய்வம் இருக்கட்டும் என்று, நேற்று
உரைத்தேனே, அதுஎதற்கு? உலக மக்கள்;
பெரும்பாலோர் தெய்வத்தின் நினைவு கொண்டுப்
பேசுகின்றார். மேலும்,நம் திராவி டத்தில்;
இருக்கின்ற பலதெய்வம் ஒழிந்து, ஒன்று
இருப்பதிலே தவறில்லை. அதனா லேதான்,
இருக்கட்டும் ஓர்தெய்வம் என்று சொன்னேன்.
இதுதவிர, பக்தர்க்கு பயந்து அல்ல!

—★—

பொதுக் குழு

தி. மு கழகப் பொதுக் குழு ஜனவரித் திங்கள் (பதினேந் தாம் தேதிக்குமேல்) நடைபெற ஏற்பாடாகி வருகிறது.

கோவை மாவட்டத்தில் இம்முறை பொதுக் குழுக் கூட்டத்தை நடத்த வேண்டுமென்று கோவை மாவட்ட தி. மு. கழகத் தோழர்கள் அன்பழைப்பு தந்துள்ளனர்.

சிறப்பான முறையில் பொதுக் குழுக் கூட்டத்தை நடத்த, கோவை மாவட்டத் தோழர்கள் இப்போதிருந்தே ஏற்பாடுகள் செய்யத் தொடங்கியுள்ளனர்.

கோவை நகரை அடுத்த பேரூர் என்ற சிற்றூரில், பொதுக் குழு கூட இருக்கிறது.

மாநில மாநாடு—'நம் நாடு' இதழ்—இவை பற்றிய திட்டம் தீட்டுவதற்காக பொதுக் குழு கூடுகிறது.

மற்ற விபரம், அடுத்த அறிக்கையில்.

—தி. மு. க. தலைமை நிலையம்

மணி மகுடம்

★

பொங்கல் மலரில் கருணாநிதி எழுதும்

பெரிய நாடகம்

ஐம்பதுக்கு மேற்பட்ட பக்கங்கள்—
அழகு துள்ளும் உரை நடை ஓவியம்—
அந்தப் புதுமைத் தேன் பருக,
புது விருந்துண்ண—
பொங்கல் மலர் காணுங்கள்!

1. அரும்பு..........?
2. பரதாயணம்........?
3. மறத்தி..........?

சூளை வட்ட தி. மு. க. நிதிக் கூட்டம்

●

முன்னாள் அமைச்சர் முத்தையா இரவுப் பள்ளி நிதிக்காக சூளை (17வது சட்டம்) தி. மு. க. சார்பாக 12-12-54 அன்று காலை பெரம்பூர் இலட்சுமி தியேட்டரில் ஒரு நிதிக் கூட்டம் நடைப்பெற்றது. தோழர்கள் ராசரத்தினம் முன் மொழிய சின்னச்சாமி வழிமொழிய தோழர் தென்னரசு கூட்டத்திற்கு தலைமை வகித்தார். பன்மொழிப் புலவர் அப்பாதுரை வகுப்புரிமை என்பதுபற்றி விளக்கிப் பேசினார்கள், அடுத்து தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் சட்டமும் சமுதாயமும் என்பது குறித்து சொற்பொழிவாற்றினார்.

இறுதியாக தோழர் மு. கருணாநிதி இன்றைய அரசியல் என்ற தலைப்பில் அரசியலாரின் நாடகச் சட்டத்தைக் கண்டித்தும், இராமாயணத்தின் சீர்கேடுகளையும் விளக்கி நீண்டதோர் சொற்பொழிவை நிகழ்த்தினார். கூட்டமுடிவில் தோழர் சு. பாலன் நன்றி கூறுகையில் கூட்டத்தின் மொத்த வசூல் ரூ. 241-12-0 என்றும் அதில் செலவு போக மீத மிருந்த ரூ. 45-0-0ல் ரூ. 20-ஐ கல்லக்குடி நிதிக்குக் கொடுப்பதாகவும் கூறி ரூ. 20ஐ கல்லக்குடிநிதிக்குத் தந்தார்.

புதையல்

மு. கருணாநிதி

முதல் தேதி!

18

மேரியின் அடாத செயலைப் புரிந்து கொள்ளாத அம்மா, என் தந்தைமீது தவருன எண்ணங்கொண்டு விட்டார்கள். தன் கணவர் தனக்கு சகிக்க வொண்ணுத கொடுமை புரிந்துவிட்டதாகவே கருதினர்கள். அன்பு மழை பொழிந்து அல்லும்பகலும் காப்பாற்றிய தாம்பத்ய உறவுக்கே மீளாப் பழி தேடிக்கொடுத்துவிட்டார் தன் துணைவர் என்று மனம் வெதும்பினர்கள். அவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டாள் அந்த வெள்ளைக்காரி என்று முடிவு கட்டிக் கொண்ட பிறகு, எவ்வளவு தான் சமாதானம் செய்தாலும் அவர்களை மாற்றமுடியாது என்று அப்பாவும் தீர்மானித்து விட்டார். உயிரையே அவர் மீது பதித்திருக்கிறேம்; அவர் இப்படி ஏமாற்றி விட்டாரே என்ற ஏக்கம், அம்மாவுக்கு!

இருதயத்தில் தனி அரசு செலுத்த அவளுக்கு மட்டுமே உரிமையளித்திருக்கிறேம்; அவள் இப்படித் தன்மீது அவசரப்பட்டு சந்தேகப்பட்டு விட்டாளே, என்ற ஆத்திரம் அப்பாவுக்கு!

அதனுல் அம்மாவும் அப்பாவிடம் சமாதானத்துக்கு வரவில்லை. அப்பாவும், அம்மாவை சமாதானப்படுத்த விரும்பவில்லை. பாட்டிக்கோ, இந்த விபரங்கள் எதுவும் புரியாது. மகனுக்கும் மருமகளுக்கும் பேச்சு வார்த்தையில்லை என்பதுமட்டும் தெரியும். கணவன் மனைவி, ஊடல் என்று கருதியிருந்தார்கள். போகப் போக பாட்டிக்கும் சந்தேகம் பிறந்து காரணமறிய முயற்சித்தார்கள். இருவரும் காரணம் தெரிவிக்கவில்லை.

"கர்ப்பவதியடா அவள்! அவள் மனங்கலங்கவிடக் கூடாது!" என்று அப்பாவிடம் பாட்டி கூறிய அறிவுரைகள் எல்லாம், பயனற்றுப் போய்விட்டன.

தங்கத்தை வயிற்றிலே சுமந்திருந்த அம்மாவுக்கு, நான் மட்டுமே ஒரு ஆறுதலாயிருந்தேன். என்னை தூக்கி வைத்துக் கொண்டு, அம்மா, எங்கேயோ சிந்தனையை செலுத்திய படி நிற்பார்களாம். பாட்டி, பக்கத்திலே வந்து, "வள்ளி" என்று கூப்பிட்டபிறகே, சிந்தனை கலைந்து திடுக்கிட்டுத் திரும்பு வார்களாம். வேறு எதைச் சிந்தித்திருக்கப் போகிறார்கள்; அன்று, டாக்டுரை பங்களாவில் கண்ட காட்சியைத்தான் சிந்தித்துக் கொண்டிருந்திருப்பார்கள்.

இந்த நிலையில் எனக்குத் தங்கையும் பிறந்தது. வறுமையின் வாடை- அப்பா அம்மா மனவேற்றுமை – பாட்டியின் சஞ்சலம் - இவைகளினூடே, எதைப் பற்றியும் கவலைப் படாத; நானும், என் தங்கையும் வளர்ந்தோம். ஆண்டுகள், ஒன்றிரண்டென உருண்டன. அப்பா, அம்மா, உறவு ஏற்படவில்லை. ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளாமலிருந்தவர்கள், இப்போது ஜாடைமாடையாகப் பேசிக் கொண்டார்கள். ஆனுல் அந்தப் பேச்சு, இருவரிடையே பிளவை அதிகமாக்கத்தான் பயன்பட்டதே ஒழிய மீண்டும் சுமுகமானநிலையை உண்டாக்கவில்லை. இன்னும் சொல்லப் போனுல், ஒருவரையொருவர் மனம் புண்படச் செய்வதற்காகவே அந்தப் பேச்சுக்கள் ஆரம்பமாயின என்று கூறலாம். பாட்டிக்கோ, இன்னது செய்வது என்று புரியவில்லை. குடும்பம், குழப்பச் சேற்றிலே சிக்கி தத்தளித்தது!

நளாயினி கதையிலே படித்திருக்கிறோம், அவள் தன் நாயகனை-தாசியின் இல்லத்திற்கு தூக்கிக் கொண்டு போனுள் என்று!

ஆனுல் என் அம்மாவோ, நிரவிசாரிக்காமலே, அப்பாவின் மீது ஐயமுற்று புயலுக்குக் காரணமாகி விட்டார்கள்,

அப்பாவின் வாழ்க்கையிலே எதிர்ப்பட்ட அந்த மூன்று சம்பவங்களும் புதிய கொள்கைகளை அவருக்கு தந்திடக் காரணமாயின. குப்பன்-சீதா. இருவரின் காதல் - இதயமற்றவர்களின் போலி நாடகம் என்று அவர் முடிவு கட்டினுர்.

மேரி-ஜோசப் - காதல், உடல் வெறிதீர்த்துக் கொள்ளும் இன்பக் கூத்து எனக் கண்டார்.

கடைசியாக, தனது குடும்பத்திலே ஏற்பட்ட கணவன் மனைவி தகராறைவைத்து, அவசரக்காரர்கள் பெண்கள், உண்மைக்கு மதிப்பளிக்காத சந்தேக ஜீவன்கள் என்றும் முடிவு கட்டிக் கொண்டார், இந்த மூன்று நிகழ்ச்சிகளையே மையமாக வைத்து, புதிய இலக்கணங்கள் எழுதினுர்.

டைரி எழுதும் பழக்கமுடைய அவர், குறிப்பிட்ட மாதம், தேதிகளிலே-நடைபெற வேண்டியது, அல்லது நடந்தது போன்ற செய்திகளுக்கு இடமளிப்பதை விட, தான் கண்ட புதிய தத்துவங்களைப் பற்றி விளக்கம் எழுதவே அதிகமாக அந்த டைரிகளில் இடமளித்தார்.

'ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறுபதம்' என்பது பழமொழி- பானைச் சோற்றைப் பொருத்த வரையிலே அந்தப் பழமொழி சரியானதுதான்- அதற்காக, எல்லாப் பானைகளிலும் உள்ள ஒரு சோறு தான் பதம் என்று கூறலாமா? பெரியவரே! தாங்களும், என் தந்தையைப்போலவே காதலைப் பற்றிய எண்ணங் கொண்டிருப்பதால், இது போன்ற கேள்வியைக் கேட்க விரும்புகிறேன்—தயவு செய்து தவருக எண்ணுதீர்கள். தங்கச் சுரங்கத்திலே அகப்படுவது எல்லாமே தங்கப்பாளமாகவோ, அல்லது வெறுங் கல்லாகவோ இருக்காதே! இரண்டும் கலந்துதானே இருக்கும். ஒரு குடும்பத்திலே ஒருவன் நல்லவன் -இன்னொருவன் பொல்லாதவன் — அந்த நல்லவன் என்ற ஒரு சோற்றைப் பதம் பார்த்து, அந்தக் குடும்பத்தார் அனைவருமே நல்லவர்கள் என்று கூறி விட முடியுமா? அல்லது, பொல்லாதவனைக் கொண்டு, அந்தக் குடும்பம் முழுதும் கொடியோர் நிறைந்த கூடாரம் என்றுதான் முடிவு கட்ட முடியுமா?

இம்மாதிரி சிந்தனைகளுக்கெல்லாம் சிறிதும் வேலை தராமல், இரண்டு மூன்று நிகழ்ச்சிகளை அடிப்படையாக வைத்து, அகிலத்தின் ஆண் பெண் உறவுக்கே அப்பா அவசர வியாக்யானம் செய்து விட்டார். அந்த வியாக்யானங்கள் அவர் எழுதிக் குவித்த டைரிகளிலே அருமையான சொற்கோர்வைகளுடன் இருந்தாலும், தேவையான அறிவுரைகளாக அமையவில்லை. ஆனுல் ஒன்று, அப்பா

வின் அந்த விளக்கங்கள் அவருக்கு மனச்சாந்திக்காக எழுதப் பட்டவை என்று விட்டு விடலாம். ஆனுல், தங்களைப் போல, மற்றவருக்கும் அந்தக் கருத்துக்களை உபதேசிப்பது எனக்கு அவ்வளவாகப் பிடிக்க வில்லை. பெரியீர்! என் கதையை விட்டு எங்கேயோ போகிறேனே என்று வருத்தப் படாதீர்கள்—இதோ, கதைக்கு வந்து விட்டேன்—ஒவ்வொரு ஆண்டும் அப்பா எழுதிய டைரிகள் குப்பையில் போய்ச் சேராமல், அவராலேயே பத்திரமாகப் பாது காக்கப் பட்டன. அம்மா பார்த்து விடக் கூடாது என்பதற்காக, அவர் அந்தப் பழைய டைரிகளை எல்லாம் மூட்டைகட்டி, பரணைமீது ஒளித்து வைத்திருந்தார்—அம்மா, கொல்லப்பட்டு, அப்பா கைது செய்யப்பட்ட போது போலீசாரின் கையிலே அகப்பட்ட டைரிகள் இரண்டே இரண்டுதான். ஒரு டைரி, முழுதும் எழுதப் பட்டிருந்தது. இன்னொரு டைரி, அப்போதுதான் வாங்கப் பட்டுப் புதிதாக இருந்தது.

முழுதும் எழுதப் பட்ட டைரி, எனது ஒன்பதாவது வயதிலே பூர்த்தி செய்யப் பட்ட டைரியாகும். அந்த டைரியிலே இருந்த வாசகங்களும், அதில் அவர் கடைசிப் பக்கத்தில் எழுதியிருந்த, முதல் தேதி செய்ய வேண்டிய காரியம் பற்றிய தகவலும்தான் அவரைப் போலீசார் கையில் சிக்க வைத்தது.

* * *

அம்மா, அப்பா இடையே தகராறுகள் பெருகிக் கொண்டிருந்த போதும்—அவர்களது தேயிலைத் தோட்டத்து வேலையிலே எந்த விதமான குறை பாடும் ஏற்பட வில்லை. என்னைப் பள்ளிக்கூடம் அனுப்பி விட்டு, அம்மா, அப்பா, பாட்டி, மூவரும், தங்கை தங்கத்தையும் தூக்கிக் கொண்டு,தேயிலைக்காட்டுக்குச் செல்வார்கள். வழக்கம் போல் உழைப்பார்கள். வீடு திரும்புவார்கள். டாக் துரை வீட்டு வேலைக்கு, முதலில் அப்பா போவதில்லை—பிறகு அந்த மேரிக்கும் ஜோசப்புக்கும் கல்யாணமாகி, அவள் அவனேடு போய்விட்ட பிறகு அப்பா, துரையின் பங்களாவிலும் வேலைகளைச் செய்து வந்தார். அம்மாவும் மனவேதனையை அடக்கிக்கொண்டு, டாக் துரை பங்களாவில் ஊழியம் செய்தார்கள். டாக்துரைக்கு அம்மாவின்மீது ஏற்பட்ட அந்தக் கொடிய எண்ணம் மாறவே இல்லை. அவனுக்கு எத்தனையோ, பெண்கள்—கங்காணி காளிமுத்து மூலமாகவும், அவனது வெள்ளாட்டி, சீதை மூலமாகவும் தவக்க மின்றிக் கிடைத்துக் கொண்டிருந்த போதிலும், தான் அடைய முடியாதது ஒன்று உலகத்தில் இருக்க கூடாது என்ற மனப்பான்மை ஆணிவேர் விட்டுக் கிளம்பியது.

கேவலம், தன்தோட்டத்துக் கூலி. அவளைத் தன் இஷ்டத்திற்கு வில் படுத்த முடிய வில்லை என்ற ஆத்திரம் விழுது விட்டது. கையிலே யிருக்கும் கனியை ஒருகடி,கடித்து விட்டெறிந்து விட்டு வானத்திலிருக்கும் சந்திரனைப், பிடித்துக் கொடு என்று குழந்தை அடம் பிடிக்கிறதே; அதுபோல அல்ல — ஆட்டையும், மாட்டையும், வேட்டையாடிக் கொன்றதுபோதாமல் ஆயிரமாயிரம் ஈக்கள் சூழ்ந்து நின்று எதிர்த்தாலும் அஞ்சாது, தேன் கூட்டை நெருங்குகிறதே கரடி-அதுபோல, அவன் வெறி பிடித்து அலைந்தான். குதித்துகுதித்துப் பார்த்து கடைசியில் திராக்ஷைக்குலை புளிக்கு மென்று குள்ளநரி நடைபோட்ட தென்று கதை தான் கேட்டிருக்கிறோம்-ஆனுல் இந்த வெள்ளை நரி, "கிட்டாதாயின் வெட்டென மற" என்ற மொழியை மறந்து, "முயற்சி திருவினையாக்கும்" என்ற அறிவுரையை இந்த மூர்க்கமான நடவடிக்கைக்கு அனுசரணையாகச் கொண்டான். எப்படியும், என் அன்னையை மடக்கிவிடக் கங்கணம் கட்டிக் கொண்டான்.

ஒரு நாள்—ஆம், அந்த நாள் தான் எங்கள் குடும்பம் அடியோடு பாழ்பட ஆரம்பித்த நாள்; அந்த துன்ப நாளிலே, தோட்ட வேலைக்கு அப்பாவும் பாட்டியும் சென்று விட்டார்கள். அம்மாவுக்கு உடல் நலமில்லை, தங்கமும் அம்மாவும் வீட்டிலே யிருந்தார்கள், நான் பள்ளிக்கூடம் போயிருந்தேன் — தேயிலைக் காட்டை சுற்றிப்பார்க்க, டாக் துரை போயிருக்கிறுன்-அங்கே அம்மா இல்லை-கங்காணி காளிமுத்து மூலமாக அம்மா வீட்டிலிருப்பதை அறிந்து கொண்டான். அங்கிருந்து டாக்துரை, வீடு நோக்கிப் புறப்பட்டிருக்கிறுன், கங்காணி காளிமுத்துவுடன்!—ஆம், அந்த வெறி கொண்ட மிருகம், தனது கோரைப் பற்களுக்கு இரை தேட, எங்கள் குடிசையை நோக்கிப் புறப்பட்டுவிட்டது-தன்னிடம் கூலி பெற்று பிழைக்கும், ஒரு பெண், மானத்தை இழக்கவும் தயாராயிருக்க வேண்டுமென்பது, அந்தக் காட்டு ராஜாவின்

தோட்டத்திலே, சட்டமாக அல்லவா இருக்கிறது!-அதற்கு எதிர்ப்புக் குரல் கொடுக்க, ஒரு ஏழையின் மனைவிக்கு ஏது அதிகாரம்? இந்த அகம் பாவம் நிறைந்த கேள்விக்குறி நெஞ்சத்திலே தாண்டவமாட என் அன்னையை நோக்கி அந்தப் பாதகன் சென்றுன்-டாக் துரையும், காளிமுத்துவும் பேசிக்கொண்டிருந்ததை கவனித்த என் அப்பா, ஏதோ சந்தேகமுற்றவராய், பாட்டியிடம் வந்து, "அம்மா! தோட்டத்துக்கு சென்று கிழங்கு வெட்டிவிட்டு, அரைமணி நேரத்தில் வருகிறேன்" என்று கூறிவிட்டு அப்பா அதைவிட்டுக் கிளம்பினுர்.

அப்பா, குத்தகைக்கு எடுத்து கிழங்கு பயிரிட்டுவந்த தோட்டம் ஒன்று உண்டு. அங்குதான் போகிறுர் என்று பாட்டி எண்ணியிருந்தார்கள், அப்பாவோ, வீடு நோக்கி விரைந்தார்.

அதற்குள் டாக்துரை, அம்மாவிடம் வந்துவிட்டான். அப்பா, வேகமாக ஓடிவந்து வீட்டுக்குள் நுழைந்தார். அப்பா அங்கே என்ன கண்டார்? அம்மா, ரத்தக்குளத்திலே மிதந்து கொண்டிருப்பதைத்தான் கண்டார். அம்மாவின் உயிர்விளக்கு, சிறிது சிறிதாக அணைந்துக் கொண்டிருந்தது. விலாவிலும், முதுகிலும் நெஞ்சிலும், முகத்திலும் குத்துக் காயங்களும், அங்கே குபுகுபுவெனப் பொங்கி வழியும் குருதியும் அம்மாவை மரண முகப்புக்கு வெகு வேகமாக இழுத்துச் சென்று கொண்டிருந்தன, ஐந்துவருட காலமாக, 'வள்ளி' என்று அன்போடு அழைக்காத அப்பா, அம்மாவை வாரி அணைத்து மடிமேல் கிடத்தியபடி "வள்ளி! வள்ளி!" என்று கதறினுர். அப்போதுங்கூட அம்மா அப்பாவிடம், கடின சித்தத்தோடு தான் நடந்து கொண்டிருக்கிறுர்கள். அப்பாவிடம் நேரடியாகப் பேசாமல்,—யாருக்கோ டில் சொல்வதுபோல, "டாக் துரை என்னை குரையாட வந்தான். நெருங்காதே என்று எதிர்த்தேன், என் கையிலே இருந்த கத்தியைக் கண்டு, அவன் பயந்து பதுங்கினுன். காளிமுத்து அவனுக்கு உதவியாக வந்து பாய்ந்தான். அவ்வளவுதான்! கத்தி அவர்கள் கைக்கு மாறியது! அதன்பிறகு——ஆனுல்——வெள்ளைக் காரியிடம் மன உறுதியை தளரவிட்ட ஆணைப்போல இல்லாமல், இந்தப்பெண், வெள்ளை நாயிடமிருந்து தன் மானத்தைக் காப்பாற்றிக் கொண்ட பெருமையைப் பெற்றுவிட்டாள். நான் சாகப்போவது நிச்சயமாகிவிட்டது. அத்தையிடம் என் கடைசி வணக்கத்தை சொல்ல வேண்டும். அதற்குள் அவர்கள் வரமாட்டார்கள், அதனுல்—.—அவர்களிடம்—என் குழந்தைகளை பத்திரமாகப் பார்த்துக்கொள்ளும்படி சொன்னுல் நல்லது"..

இந்த வார்த்தைகள் தேய்ந்த நிலையிலே, வெளிப்பட்டன.

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

கும்பமேளா’ கோலவில்

டில்லி பாராளு மன்றம் நாற்பதுகோடி மக்களின் பிரதி 'நிதிகள் கூடிப் பேசும் கூட்டப்; இந்திய உபகண்டத்து அரசியலின் இருதயம்! அங்கே பல மொழிகள் பேசுவோர், பலவித கலாச்சாரங்கள் உடையோர், வெள்ளேக்காரன் செய்துவிட்டுப் போன மாபெரும் பாதகத்தால் 'இந்தியன்' என்கிற பெயரிலே தங்குகின்றனர்.

தாய் மொழியைப் பேணும் தகைமையாளர்கள் அங்கே இருப்பர். இந்தி மொழிக்கே மணிமகுடம் புனைய நினைக்கும் மொழிவெறி பிடித்தலேபவர்களும் அங்கே உண்டு!

நாட்கள் ஆக, ஆக-இந்திக்கு ஆக்கம் தேடிகளின் அக்கிரமம் பெருகியபடியே இருக்கிறது. சென்ற கிழமை துணைத் தொழில் துறை அமைச்சர் அபீத் அலி கேள்வி ஒன்றிற்கு இந்தியில் பதில் அளிக்கையில் அங்காடிக் கடையில் பேசும் மொழியில் அவர் பதில் சொல்லியமைக்காக பாராளுமன்றமே கைகொட்டிச் சிரித்ததாம்,

அந்த சிரிப்பொலி தலைவர் மாவ்லங்சருக்கு காதிலே நாராசம் காய்ச்சி ஊற்றியதைப்போல இருந்ததாம்-உடனே அவர் அங்கத்தினர்மீது சீறிவிழ ஆரம்பித்துவிட்டார்.

"பதினைந்து ஆண்டுகள்வரை ஆங்கிலத்தில் பேசிவிட்டு!

மறுநாள் உடனடியாக இந்தியில் பேசிவிடமுடியாது,"

என்று அறவுரை பகர்ந்தாராம், அவர்!

அதைத்தானே நாமும் கேட்கிறோம்: தென்றலிலே மிதந்தவன் திடீரென்று தீக்காட்டினுள்ளே புகமுடியுமா வென்று திருப்பித் திருப்பிக் கேட்டோம். திடீரென இந்தியை சரிவர பேசமுடியாதென சொல்லும் மாவ்லங்கர் ஏனே இப்போதுமெம்பர்கள்அனைவரையும்இந்தியில்பேசச்சொல்லுகிறார்

அதுமட்டுமா! இந்தியில் தப்பும் தவறுமாக பேசமுயலும் அங்கத்தினர்களைப் பார்த்து மற்றவர்கள் சிரிப்பது தன்னுடைய மனத்தைப் புண்படுத்துகிறதாம்.

இந்தியின் நுழைவால், பிரதேச மொழிகளெல்லாம் மந்திகைப் பூமாலையாக மாறுவதைக் கண்டு மனம் புண்படாத மாவ்லங்கர் ஒருவர் கொச்சை மொழியிலே பேசியதும் மற்றவர்கள் கேட்டு சிரித்தால்-'சிரிக்காதே' என்று சீறுகிறார். இன்னும் எத்தனை நாளுக்குத்தான் மொழி வெறியர்களின் இறுமாப்பை மற்றவர்கள் தாங்கிக் கொள்ள வேண்டுமோ ?

மாஜினி.........

11-ம் பக்கத் தொடர்ச்சி

என்று சொல்லுவார்கள் — அப்படியல்ல—மாஜினியைப் பற்றிக் கேள்விப்பட்ட செல்வக் குடும்பத்தில் பிறந்த மாதரசி ஒருத்தி 420 பவுன் கொடுத்து வாங்கித் தந்தாள் அந்தக் கையெழுத்துப் பிரதியை வைத்துக் கொண்டு மாஜினி புதுப்பித்த நூல்வடிவம் வெளிவந்த பின்புதான் டாண்டியின் தத்துவம் ஒளிவிடத் தொடங்கியது,

மாஜினி எழுத்தாளன் மட்டுமல்ல—பேச்சாளன் மட்டுமல்ல—புரட்சிக்காரன் மட்டுமல்ல-போர் நுணுக்கம் தெரிந்த அனுபவசாலியுமாவான் - அவர் தீட்டிக் காட்டிய திட்டப்படி களம் குதித்த படை கடைசி வரை தோற்றதில்லை.

மாஜினி தனக்கென வாழா பிறர்க்குறியாளன்! அவனுடைய பேச்சும் மூச்சும் சாகும்வரை நாட்டைப்பற்றியேதான்!

'கியூதித்தா கித்தோலி என்னை நேசித்து விட்டாள்—நானும் அவளை விரும்புகின்றேன்—அந்த விதவைப் பெண்ணுக்கு வாழ்வுதரவே ஆசைப்படுகிறேன் - என்னை மறந்து விடுங்கள்'என்றுஎத்தனை பெரிய இடத்துப் பெண்களுக்குமாஜினி உபதேசித்திருக்கிறான் தெரியுமா? அதனால் உக்கிச் செத்த ஊர்வசிகளுக்கு பரிந்து கொண்டு 'மாஜினி இது உனக்கு அடுக்குமா' என்று கேட்டவர்களுக் கெல்லாம் 'ஆசைப்பட்டவர்களுக்கெல்லாம் நான் கணவனானால் என் கதி என்னாவது?' என்று இடித்துரைக்கத்தான் மாஜினி தவறியதுண்டா? மாஜினி பேச்சு ஒரு போர்வாள்தான் -- மறுவெட்டு என்பதே இல்லை.

அந்த ,ஏழைகள் தலைவனின் சமாதி அதோ அந்தப் பைசா நகரத்தில் அசைவற்று இருக்கிறது பாருங்கள்! அடுத்த சமாதி யாருடையது தெரியுமா? மாஜினி தாயாருடைய சமாதி அது! மகனின் ஆசைக்கிணங்க மாதாவின் கால்மாட்டில் சமாதி கட்டப்பட்டிருக்கிறது. அந்தக் கல்லறை கல்வெட்டுக்களிலே இடம் பெற்றுவிட்டது-மாஜினி செத்தும் சாகாதவர்பட்டியிலே முதலிடம் பெற்று விட்டான்.

●

அபாக்ய.........

★ 2-ம் பக்கம் தொடர்ச்சி

கள். சிந்தாமணி யாருக்கும் பதில் சொல்லாமல் மௌனமாகப் போய் விட்டாள்.

வெளியூர் சென்றிந்த ஜோதி, சிந்தாமணியின் வீட்டுக்கு வந்தான். ஒரு சிறு ஓலைவீடுஅது—அவர்கள் குடும்பம் நடத்த கட்டிக்கொண்ட தற்காலிகமாளிகை. கதவைத் தட்டினான். கதவு தானே திறந்தது—உள்ளே எட்டிப் பார்த்தான். இருளில் மங்கலான வெளிச்சம் தெரிந்தது. கதவைத் தாளிடாமலே தூங்கி விட்டாளே, என்று கூறிக் கொண்டே, சிந்தாமணி என்று குரல் கொடுத்தான் — பதில் இல்லை. படுக்கையைப் பார்த்தான். திடுக்கிட்டான். அலறியே விட்டான், என்ன நினைக்கிறீர்கள்! சிந்தாமணி போய் விட்டாள். என்றா? அல்லது தற்கொலை செய்து கொண்டாள் என்றா? தற்கொலை செய்து கொண்டிருந்தால் அவள் என்னிடம் கதையைச் சொல்லியிருக்க முடியாதே—அதனால் அவள் ஓடித்தான் விட்டாள் என்று முடிவு கட்டுகிறீர்களா? அது தான் இல்லை!

ஜோதி கண்ட காட்சி அது அல்ல. ஒரு சட்டுமஸ்தான தேகமுள்ள வாலிபனின் மேனியை இறுக அணைத்தபடி சிந்தாமணி தூக்கத்தில் ஆழ்ந்திருந்தாள். அவளது மெல்லிய கன்னங்களிலே, அந்த வாலிபனின் முகம் புதைந்திருந்தது,

"அடிபாவி" என்று ஜோதி கத்தினான். சிந்தாமணி எழுந்தாள்!

அவள் கழுத்தை நெறிக்க ஜோதி துடித்தான். அதை அந்த வாலிபன் தடுத்தான்.

"இது பலநாளாய் நடக்கிறது, இன்றுதான் கண்டாயோ?" என்று சிந்தாமணி, எதிர்த்துப் பேசினாள். ஜோதி, தன் தலையில் அடித்துக் கொண்டு, வீட்டுக்குத் திரும்பினான். "விபச்சாரி! விபச்சாரி!" என்று அவன் வாய் உளறிக்கொண்டேயிருந்தது. அப்படி அவன் விபச்சாரியாகவாவது கருதி, தன்னை மறந்துவிட்டால் போதும் என்பதற்காகவே, சிந்தாமணி, அந்தக் கொடிய செயலில் இறங்கினாள் என்ற உண்மை அவனுக்குத் தெரியாது.

அவன் எண்ணியிருக்கிறான், அவள் விபச்சாரி என்று!

அவளை விபச்சாரியாக்கியது அவளது ஆசைப் பெருவெள்ளமல்ல!

ஜோதியின் குடும்பத்திற்கு, ஆறுதல் அளிக்க வேண்டும் என்பதற்காகவே, அவள் அந்த முடிவுக்கு வந்தாள் என்பது அவளுக்கு மட்டுமே தெரியும்.

விபச்சாரி என்று பெயர் எடுத்தாலும் பரவாயில்லை.

குடும்பத்தைக் கெடுத்த பழிகாரி, சண்டாளி, என்ற பெயரை சுமக்க அவள் விரும்பவில்லை. அனைவருக்கும் வரவேற்பு வழங்கும் மண்டபமாக, அந்தக் குடிசையை அவள் அமைத்துக் கொள்ள வில்லை.

கொள்கை நிறைவேறியதும், அந்த ஊரை விட்டு வெளியேறினாள். "என் அம்மா, ஒழுங்காக வாழ சூழ்நிலையிருந்தும் ஒழுங்காக வாழவில்லை - நானோ, ஒழுங்காக வாழ எண்ணங் கொண்டும், சூழ்நிலை என்னை ஒழுங்காக வாழ விடவில்லை!"

இதுதான் அந்தப் பிச்சைக்காரி தன் கதைக்குத் தந்த முடிவுரை-ஜோதியின் தகப்பனார் என்ன ஆனார் என்று கேட்டேன் அவருக்குப் பைத்தியம் தெளிந்து விட்டது— ஆனால் அவரது மகன் ஜோதிக்குப் பைத்தியம் பிடித்து கடைசியில் இறந்தே விட்டான் என்று அவள் அழுது கொண்டே சொன்னாள். "ஆமாம்—ஜோதி உன்னை மறக்க வேண்டுமானால், நீ தற்கொலை செய்து கொண்டிருக்கலாமே — அதற்காக இப்பெரும் பழிக்கு ஆளாக வேண்டியதில்லையே?" என்று நான் அவளைக் கேட்டேன், அதற்கு அவள், தேம்பும் குரலில் சொன்ன பதில் இதுதான்;

"தற்கொலை செய்து கொள்ளத்தான் நினைத்தேன்-ஆனால் ஜோதியின் அன்புச் சின்னம் என் வயிற்றிலே மூன்று மாதம் வளர்ந்திருந்தது-அதை அழிக்க நான் விரும்பவில்லை -- அதற்காகவே தகாத தந்திரத்தை கையாண்டு, ஜோதியின் மனதை மாற்றினேன்-ஆனால் நான் எதற்காக உயிர் வாழ இச்சித்தேனோ; அந்த ஆசை நாசமாகி விட்டது. போஷாக்கில்லாத நிலையில் பிறந்த ஆண் மகவு-பிரேதமாகவே பிறந்துவிட்டது-" இதைச் சொல்லிவிட்டு, அவள் ஒரு பெருமூச்சோடு எழுந்தாள்

துயரத்தின் சாயல், அவளது ஒவ்வொரு வார்த்தையிலும் வெளிப்பட்டது- அதோ அந்த வீட்டுக்கெதிரே பாடுகிறாள் பாருங்கள்; அந்த சோக கீதத்தில்கூட, ஏழ்மையின் பிரதிபலிப்பு இல்லையே; காதலின் தோல்வி தானே; எதிரொலிக்கிறது.

திருமணம்

28-11-54 ஞாயிறு காலை 9-மணிக்கு தஞ்சை வடக்கு ராஜவீதியில் தோழர் இராமச்சந்திரனுக்கும் தோழியர் சரசுவதிக்கும் சீர்திருத்த திருமணம் காந்தை புலவர்கல்லூரி தலைவர் திரு. இராமநாதன் அவர்கள் தலைமையில் மணம் நிகழ்ந்தது. பின்தோழர்கள்ஏ. வி. பதி, எஸ். பெத்தண்ணன், ப. நாராயணசாமி, கரந்தை கணேசன், இராஜகோபால், சுப்பண்ணா ஆகியோர் மணமக்களை வாழ்த்தினர். பின்னர் மணமக்கள் சார்பில் தோழர் என். எஸ். சண்முக வடிவேல் நன்றிகூற இனிது முடிவுற்றது விழா.

★ ஒரே கடவுள் ★

★

சிங்கத் தம்பிகளே! தங்கத் தங்கைகளே!

'முரசொலி 'பொங்கல் மலரி'ல் பிறைவானம் உண்டா? அதில் என்னென்ன இருக்கும்? எப்படி எப்படி இருக்கும்?' என்று உங்களில் அநேகர் கேள்விக் குவியல்களை அனுப்பியிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் இதோ, தித்திப்பான பதில்! பொங்கல் மலரில் பிறைவானம் உண்டு; அதுவும் கரும்பைவிட இனிப்பாக—பொங்கலைவிட சுவையாக! அதில் என்னென்ன வருகிறது தெரியுமா? அழகுக் கதை—அற்புதக் கட்டுரை-சிங்காரப் பாட்டு— சிரிப்பு வெடிகள்-சித்திரத்தில் முத்துவும் செல்வியும் — இன்னும் நிறைய! மலரைத்தான் பாருங்களேன்!

இந்த இதழில் தவறித் திருந்திய தம்பி ஒருவனின் கதை வருகிறது. படியுங்கள்:

* * *

"ஐநூறு ரூபாய் இருக்கிறது மோகன், கொண்டு போய் 'பேங்'கில் கட்டிவிட்டு உடனே வா. சீக்கிரமாக வந்து விடு" என்று சொல்லிக் கொண்டே, சில்லரைகள் நிறைந்த ஒரு துணிப் பையை நீட்டினார் கடை முதலாளி.

"சரிங்க" என்று சொல்லியபடி அதை வாங்கிக் கொண்டான் மோகன். உடனேயே கடையைவிட்டு கீழே இறங்கினான். நடந்தான். பேங்கை நோக்கி வேகமாக நடந்தான்.

கொஞ்ச தூரம் சென்றான். திடீரென்று 'ஐயோ! அம்மா!' என்ற அலறல் எழுந்தது. மோகனின் கால்கள் 'சடக்' கென்று நின்றன. கண்கள் ஓரிடத்தை கூர்ந்து நோக்கின. அங்கே? நடைபாதை யோரத்திலே ஒரு நெஞ்சுலுக்கும் சம்பவம் நிகழ்ந்து கொண்டிருந்தது. ஒரு தாய்—ஏழைத் தாய். அவனுக்கு ஒரு மகன்—அதுவும் ஒரே மகன். அந்த மகனைத்தான்—அந்த செல்லக் குழந்தையைத்தான் அந்தத் தாய் தன் பலம் கொண்ட மட்டும் அடித்துக் கொண்டிருந்தாள். அடி தாங்க முடியாத சிறுவன் கத்தினான்; கதறினான். துடித்தான்; துவண்டான்.

அந்த சோகக் காட்சியைக் கண்டதும் மோகனின் கண்களில் நீர் ததும்பியது. 'சடா' ரென்று திரும்பினான். வேகமாக நடந்தான். ஆனால்...? அவன் கால்கள் மட்டும்தான் முன்னால் நடந்தன. ஆனால் மனமோ, பின்னாலே ஓடிக் கொண்டிருந்தது.

ஆறு மாதத்திற்கு முன்பு — இப்படித்தான், ஒரு நாள் மோகனும் அடிவாங்கினான். அதுவும் தன் தாயின் கரங்களாலேயே!

மோகனின் மனதில் பழைய நினைவுகள் தோன்றி விட்டன. அடங்காது எழும்பிய அந்த எண்ணங்கள் அவனை ஆறு மாதத்துக்குமுன்னால்இழுத்துக் கொண்டு போய் விட்டது.

மோகன் ஏழைச்சிறுவன். பிறக்குமுன்பே தந்தையை இழந்த அபாக்கியசாலி. அம்மா தான் அவனைக் காப்பாற்றி வந்தாள். ஒரு வேளை உணவு, இரு வேளை பட்டினி—இப்படி ஓடிக் கொண்டிருந்தது அவர்களது வாழ்க்கை.

மோகன் ரோசக்காரன். பாவம், அவனுக்கு எப்படித் தெரியும் ஏழையாகப் பிறந்தவன் ரோசக்காரனாக இருக்கக் கூடாது என்பது? அவனுக்கு யாராவது தன்னைக் கேவலமாக பேசினால் சடக்கென்று கோபம் வந்துவிடும். அதனாலேயே அவன் ஒரு இடத்திலும் நிலைத்து வேலை செய்ய முடியவில்லை.

அவனது அம்மா யாரையாவது கெஞ்சி ஏதாவது வேலையில் சேர்த்துவிடுவாள். ஆனால், அவன்மறுநாளே திரும்பி வந்துவிடுவான், யாரோ கோபமாகப் பேசினார்கள் என்று சொல்லிக் கொண்டு. அவனது அந்த செய்கை அவனுடைய அம்மாவுக்குக் கொஞ்சங்கூட பிடிக்கவில்லை. பின் என்ன? எத்தனை நாளைக்குத்தான் அவளால் பட்டினி கிடக்கமுடியும்?

இப்படி இருக்கும்போது ஒரு நாள்—

அன்று அம்மா பட்டினி. மூலையில் முடங்கிக் கிடந்தாள். பசிவேறு; வேலைதேடி வெளியில் அலைந்த களைப்பு வேறு. அவளுக்கு ஒரே கோபம்!

அந்த நேரத்தில் எங்கேயோ வெளியில் சென்றிருந்த மோகன் வந்தான். அவன் கையிலே என்றுமில்லாத 'ஒன்று' இருந்தது. அந்த 'ஒன்று' அம்மாவின் கோபத்தையும் அதிகமாக்கி விட்டது. "அம்மா! பார்த்தியாம்மா எவ்வளவு அழகா இருக்கு?" என்று சொல்லிக் கொண்டே அதை அம்மாவின் முகத்தருகில் நீட்டினான் மோகன்.

அம்மாவின் கோபம் எல்லை மீறியது. "அட நாசக்காரா! பசியாலே வாடும்போது பட்டம் வேறு வேண்டுமா? ஏதுடா காசு?" என்று சீறினாள். அவன் கையிலிருந்த வண்ணப் பட்டத்தை பிய்த்து எறிந்தாள். அதோடு மட்டுமல்ல; "உன்னைப்பெற்றதற்கு ஒரு கல்லைப் பெற்றிருக்கலாமே, மடையா" என்றும் திட்டினாள். அடித்தும் விட்டாள். பொல்லாத கோபம், பிள்ளைப் பாசத்தையும் மறந்து விட்டது. பாவம்! அவளுக்கு எப்படித் தெரியும்; காற்றில் நூலறுந்து பறந்து வந்து பட்டத்தைத் தான் தன் மகன் பெரிய சொத்தாக கொண்டு வந்தான் என்பது.

மோகனின் கண்கள் கலங்கி விட்டன. அடி வாங்குவதா?—அதுவும் அம்மாவிடமா? — இப்படி எண்ணினான். ரோசம் பொத்துக் கொண்டு வந்தது. அவ்வளவுதான்; 'சடக்' கென்று திரும்பினான். 'சரசர' வென்று நடந்தான். வேகமாக நடந்தான். அந்த ரோசம் அவனை சொந்த ஊரை விட்டு விரட்டியது, சென்னைக்கு வரச் செய்தது; பட்டினியாக அலைய வைத்தது; கடைசியில் காசுக்கடை கணபதியிடமும் வேலையாளாக அமர்த்தி விட்டது.

மோகன் அன்று முதல் நன்றாக உழைத்தான். 'அப்பப்பா! சின்னப் பையன் என்றுபயந்தோமே; ஆச்சரியப் படும் அளவுக்கல்லவா வேலை

★ 10-ம் பக்கம் பார்க்க

சிறிய வயதிலே

அந்தத் தெருவிலேயே அதுதான் பெரிய வீடு. அது மட்டுமல்ல; அங்கே மகிழ்ச்சிக்கும், சிரிப்புக்கும் எப்போதும் குறைவே இருக்காது. ஆனால், அந்த வீட்டில் தான் அன்று ஒரே துக்கம்; ஏக்கம்!

"ஐயோ! இன்னும் சாப்பிடக்கூட வில்லையே, என் செல்வம்; எங்கே போனானோ?" என்று புலம்பினாள் அம்மா. "என்ன ஆனானோ?" என்று முனகினார் அப்பா.

இவ்வளவுக்கும் என்ன காரணம்? அவர்களது மகனை — அந்த வீட்டு செல்லத் தம்பியைக் காணோம். அதுவும் காலையிலிருந்து. கேட்க வேண்டுமா? எல்லோரும் தேடு தேடென்று தேடினார்கள். பலன்...? பையன் கிடைக்கவே யில்லை.

மாலை நேரமும் நெருங்கி விட்டது. வீட்டு வாசலில் கவலையோடு நின்று கொண்டிருந்தார் அப்பா. அப்போது பையனின் ஆசிரியர் அந்தப் பக்கமாக வந்தார். அப்பா செய்தியைச் சொன்னார்; அழுதார்.

செய்தி அந்தக் கிழ ஆசிரியரையும் திடுக்கிட வைத்து விட்டது. 'அப்படியா?' என்று அதிர்ச்சியுடன் கேட்டுக்கொண்டே பக்கத்தில் கிடந்த ஒரு பாழடைந்த பல்லக்கில் சாய்ந்தார். மறுகணம் 'இதோ! இதோ!' என்று கத்தியும் விட்டார்.

எல்லோரும் ஓடிவந்து பார்த்தார்கள். அங்கே...? அந்தப் பாழடைந்த பல்லக்கில், தூசிக்கும் குப்பைக்கும் மத்தியில் தூங்கிக் கொண்டிருந்தான் அந்தக் காணாமல் போன தம்பி. அவன் கையிலே ஒரு காகிதம்இருந்தது. அதில்அவன் சொந்தமாக எழுதிய ஒரு கவிதையும் இருந்தது!

காலை முதல் தனி இடத்தில் சிந்தித்து சிந்தித்து ஒரு கவிதை எழுதி விட்டோமே என்ற நிம்மதியுடன் தூங்கிக்கொண்டிருந்தான் அந்தத் தம்பி. அவன் தான் பத்தாவது வயதிலேயே பாட்டெழுதத் தொடங்கி—பின் நோபல் பரிசையும் பெற்ற கவி ரவீந்திரநாத் தாகூர்!

பெரிய மனத்

பிறைவானம்...

● 9-ம் பக்கத் தொடர்ச்சி

செய்கிறான்' என்று எல்லோரும் வியந்தார்கள். கணபதி அவன் வேலையை மெச்சினார்; திறமையைப் புகழ்ந்தார்; பணம் கொடுத்து பேங்கிற்கு அனுப்பும் அளவுக்கு நம்பியும் விட்டார்.

இவை எல்லாம் மோகனின் மனதில் தோன்றின. அவன் கண்களில் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. அம்மா! இப்போது அவர்கள் எங்கேயிருக்கிறார்களோ? என்ன செய்கிறார்களோ? — இப்படி எல்லாம் அவன் மனது எண்ணியது; எண்ணி ஏங்கியது; ஏங்கித் துவண்டது.

அதே சமயம் அவன் மனதிலே வேறு ஒரு விபரீத எண்ணமும் தோன்றிவிட்டது. 'அம்மா என்னை எதற்காகத் திட்டினார்கள்? எதற்காக அடித்தார்கள்? நான் வேலை செய்யவில்லை என்பதால்தானே? பசியைத் தடுக்க பணமில்லை என்பதால்தானே? ஆனால், இப்போது......இதோ......என் கையிலே......பணம்! அதுவும் ஒன்றல்ல; இரண்டல்ல; ஐநூறு ரூபாய்! இதை அப்படியே கொண்டு போய் அம்மாவிடம் கொடுத்தால்...' இப்படி எண்ணியது அவன் பாழும் மனம்!

மறுகணம் அவன் கண் முன்னே அவனை நம்பிய முதலாளி வந்து நின்றார். அவருக்கு துரோகம் செய்வதா? மோகனின் மூளை குழம்பிப் போனது.

அதேகணம் கந்தல் உடை— கலங்கிய கண்கள்—பரட்டைத் தலை — பட்டினிக் கோலம் — இப்படி அவன் கண்முன்னே தோன்றியது ஏழைத்தாயின் உருவம். அவன் தடுமாறினான். தத்தளித்தான். கடைசியில் பேங்கை நோக்கிச் சென்று கொண்டிருந்த அவனது கால்கள் பாதை மாறின. புகை வண்டி நிலையத்தை நோக்கி நடந்தன. ஓடின.

ஃ ஃ ஃ

"அம்மா" என்று ஆவலுடன் அழைத்தது ஒரு குரல். அம்மா திடுக்கிட்டாள். திரும்பிப் பார்த்தாள். மறுகணம் "வந்தியாடா, என் கண்ணு" என்று அலறினாள், ஆசையுடன் தாவினாள். இருக அணைத்துக் கொண்டாள் மோகனை. அவளுக்கு ஒரே துடிப்பு! மகனைக் கண்டு விட்ட மகிழ்ச்சி!

'எங்கேடா போயிருந்தாய், என் செல்வமே? அம்மாவை மறந்து எப்படியடா இருந்தாய்?" என்று ஆவலுடன் அடுக்கடுக்காக கேட்டுக் கொண்டே வந்தாள். ஆனால் 'சடா' ரென்று நிறுத்தி விட்டாள். மோகனின் கையில் இருந்த பணப்பையைப் பார்த்து விட்டாள். "ஏதுடா இந்தப் பணப்பை?" என்று கேட்டும் விட்டாள்.

திடீரென்று இந்தக் கேள்வியை எதிர்பார்க்க வில்லை மோகன். ஆகவே தடுமாறினான். "இது...இது ... இதுவா அம்மா? நான்...நான்...வந்து சம்பாதிச்சதம்மா!" என்று உளறிக் கொட்டினான் அவன். உடல் 'குப்'பென்று வியர்த்தது!

அம்மா நம்பவில்லை. "மோகன்! உண்மையைச் சொல்!" என்றாள். அவள் குரலில் கண்டிப்பு இருந்தது.

"அம்மா! நான் சம்பாதிக்கவில்லை என்றுதானே என்னை அடிச்சே...அதுக்காகத்தான் ஐநூறு ரூபாய்... இதோ!"

"அதிருக்கட்டும் ... ஏது பணம்?"—அம்மாவின் குரலில் இப்போது கோபமும் சந்தேகமும் கலந்தன.

மோகன் பேசாமல் நின்றான். அவன் கண்கள் அம்மாவை பயத்துடன் பார்த்தன.

"ஏது, சொல்? திருடினாயா?... சொல் சீக்கிரம்"—அம்மா மீண்டும் அதட்டினாள்.

மோகனின் உதடுகள் நடுங்கின. உடல் வெலவெலத்தது. அவன் வாயைத் திறக்கவில்லை. ஆனால்? தலையை அசைத்தான், 'ஆமாம்' என்பதற்கு அடையாளமாக.

மறுகணம் அவன் கன்னத்தில் 'பளார்' என்று ஓர் அறை விழுந்தது. மோகன் திடுக்கிட்டான். "அம்மா!" என்று அலறினான்.

"முட்டாளே! ஏனடா இந்த புத்தி?" அம்மா மீண்டும் கத்தினாள். மீண்டும் அடித்தாள்.

"இல்லையம்மா! இல்லையம்மா!" என்று அலறினான் மோகன்.

"ஓடு; ஓடு! இது யாருடைய பணமோ அவரிடமே கொண்டு போய் கொடு! உடனே ஓடு!' அம்மா கையை நீட்டிக் கத்தினாள். மோகன் அவள் முகத்தை பார்த்தான். ஓடினான். வேகமாக ஓடினான்.

ஃ ஃ ஃ

அந்த ஓட்டத்தின் முடிவு?... அதுதான் கதையின் முடிவு!

கடைமுதலாளி கணபதி-அவர் நல்லவர். திருந்திய மோகனை-தவறை உணர்ந்து காலில் விழுந்த மோகனை மன்னித்து விட்டார்.

மோகன், எண்ணாமல் தவறுக்குத் துணிந்தேனே என்று வருந்தினான். முதலாளியின் பெருந்தன்மையைக் கண்டு வியந்தான். மீண்டும் அவரிடமே வேலைக்கு அமர்ந்து விட்டான்.

அம்மா, மோகனிடமே வந்து விட்டாள், பசி என்றாலும் தேவைப்படுவது பணம் மட்டுமல்ல; மானமும் கூட என்று சொன்ன அம்மாதான் இப்போது மோகனின் ஒரே கடவுள்!

— சொர்ணம்

சி. பி. சிற்றரசு

தோழர் சிற்றரசு பெங்களூரில் முதல் முறையாக (15 நாட்கள்) மருத்துவம் பெற்ற பிறகு சனிக்கிழமை மீண்டும் பரிசோதிக்கப் பட்டு மேலும் ஒரு மாதம் இருக்க வேண்டுமென்றும் பணிக்கப்பட்டிருக்கிறார்.

குரு தட்டிக்......

★ 4-ம்பக்கம் தொடர்ச்சி

யிலே நம்மவர் இல்லை — ஏன், மத்திய அரசு தனி ஒரிரு மாகிலங்களின் செல்வாக்கிற்கு கட்டுப்பட்டுவிட்டதாலல்லவா! இந்திக்கு குஜராத்தியிலே எதிர்ப்பு, வங்கத்திலே எதிர்ப்பு, ஆனாலும் உ. பி.யின் கூச்சலே அங்கே மேலோங்கி நிற்கிறது. காரணம் என்ன? உ. பி.யைச் சேர்ந்தவர்கள் பெரும்பான்மையான உயர்ந்த பதவியில் இருப்பதைத் தவிர காரணம் வேறு எதுவாக இருக்கமுடியும்? வங்கமும், சென்னையும்தான் புரட்சியைத் தூண்டும் புனித பூமி என்று காந்தியார் புகழ்ந்திருக்கிறார்; குமாஸ்தா வேலையிலிருந்து காரியதரிசி பதவிவரை பார்ப்பதற்குரிய அறிவாற்றல் சென்னைக்குத்தானுண்டு என்று மறைந்துபோன அரசியல் மேதைகள் ஒருவர்கூட சொல்லாமலில்லை; ஆனால் மந்திரி பதவி மட்டும் உ. பி.க்குத்தான் என்றால் நம் நெஞ்சு கொதிக்காதா? நேற்றுப் பெய்த மழையில் இன்று முளைத்த காளான்களுக்கு இவ்வளவு செல்வாக்கு என்றால் தள்ளாத வயதிலும், அந்தக் குடு குடு கிழவனும் காந்திக்கு தோளோடு தோள் தந்த தமிழர்களின் இதயம் வேகாமலா போகும்?

"அலகாபாத் பண்டிதரே, ஆனந்தபவனத்தின் ஜோதி விளக்கே 'காங்கிரஸ் இயக்கத்தைத் திட்டித்தான் எதிர்கட்சிக்காரர்கள் வளர்கிறார்கள்' என்று சென்ற வாரம் கட்டாக் பொதுக் கூட்டத்தில் கர்ஜித்தீரே இதற்கென்ன சொல்லுகிறீர்கள். நீங்கள் பரிபாலிக்கும் இந்தியா ஏக இந்தியாவா? அல்லது டில்லி சர்க்கார் உ. பி.யின் தலைமை நிலையமா" என்று கேட்டால் என்ன சொல்லுவார் சொல்லுங்கள் பார்ப்போம்!

●

'கலாநிதி'

கலைத்துறையைத் தூற்றி வாழ்பவர்களும், துவேஷ உணர்ச்சியைக் கிண்டிவிடுபவர்களும் பத்திரிகை நடத்திவரும் இந்நாளில் நடு நிலைமையோடு தோழர்கள் மல்லிகார்ஜுனனையும், வி. நாராயணனையும் ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் 'கலாநிதி' வார இதழ் நம் கருத்தைக் கவர்கிறது. சினிமா உலகச் செய்திகள் மட்டுமல்லாது, நாடக சங்கீத, நாட்டியத் துறையின் செய்திகளையும் அவ்வப்போது சுவை குன்றாமல் தருவது சிறப்பாக இருக்கிறது.

இந்த ஏட்டை கலைஉலகு தனக்குக் கிடைத்த நல்லதொரு நிதியாகவே நினைக்குமென நம்புகிறோம்.

[கலாநிதி — புதுத் தெரு, சென்னை-4. விலை 2-அணா

அந்தப்புரம்

[நாடகம்]

கதை-வசனம் எஸ். பி. நாதன்

அழகிரி மன்றம்

இலவச இரவுப்பள்ளி நிதிக்காக

19-12-54 ஞாயிறு மாலை 6-மணிக்கு திருவல்லிக்கேணி கலாமண்டபத்தில்

மு. கருணாநிதி தலைமையில் நடைபெறும்.

நடிப்போர். வளையாபதி முத்து கிருஷ்ணன், ரேவதி, சி ஆர், ராஜகுமாரி, மற்றும் பலர்

கட்டணம் ரூ. 1, 8 அணா

புதையல்......

○ 7-ம் பக்கத் தொடர்ச்சி

அம்மா கண்களை இறுதியாக மூடிவிட்டார்கள், குழந்தை தங்கம் அம்மாவின் மேலே விழுந்து புரண்டு கதற, அம்மா என் அருமைத் தங்கத்தை தொட்டுக்கூட பார்க்க முடியாமல், அசைவற்றுக் கிடக்க— அங்கே அப்பாவும் செயலற்று நின்றார்.

அந்த சமயத்திலே போலீஸ் படை உள்ளே புகுந்தது-அது டாக் துரையின் ஏற்பாடு. கங்காணி காளிமுத்து வாயிலாக செய்யப்பட்ட கைங்கர்யம். போலீசார், வீட்டை சோதனையிட்டனர். அவர்கள் கையிலே அப்பாவின் பழைய டைரிகள் சிக்கவில்லை. ஆனால், அப்பாவை சிக்கவைக்கும் இரண்டு டைரிகள் மட்டும் கிடைத்து விட்டன, அவர்களிடம்!

ஓட்டைப் பீரோவிலே இருந்த அந்த டைரிகள் தான் அப்பாவைக் காட்டிக் கொடுக்கத் துணை புரிந்தன.

ஒரு டைரியிலே இருந்த வாசகம் - "ஒன்று வள்ளி சாகவேண்டும்; அல்லது நானாவது சாகவேண்டும் - அப்போது தான் இந்தக் குடும்பத்தில் நிம்மதியிருக்கும்!"

அதே டைரியின் கடைசிப் பக்கத்திலே உள்ள ஒரு வாசகம், சர்க்கார் தரப்பு வக்கீலுக்கு மிகவும் சாதகமாயிற்று-

"முதல் தேதி - வள்ளி வெட்டப்பட வேண்டும்." இதுவும் அப்பாவின் கையெழுத்து தான். போலீசாருக்கு ஆதாரம் போதாதா என்ன?

[வளரும்]

திருத்தம்

புதையல் - ஆறுவது பக்கம் நான்காவது பத்தியில் 'எல்லாப் பானைகளிலுமுள்ள ஒரு சோறுதான் பதம்' என்பதை 'எல்லாப் பானைகளிலும் உள்ள சோற்றுக்கும் இந்த ஒரு பானையிலுள்ள ஒரு சோறுதான் பதம்' என்று திருத்தி வாசிக்கவும்.

பைசா நகர் கல்லறை!

அரசாங்கம் புரிந்துவரும் அட்டகாசங்களை எதிர்ப்பவர்களுக்கு இந்த ராஜாங்கவர்க்கத்தினரின் 'அகராதி'யிலே, 'ராஜதுரோகி' என்ற பட்டமிருக்கலாம். ஆனல் அந்த 'ராஜதுரோகி'களுக்கு வரும் லிகிதங்களை பிரித்துப் பார்க்க அந்த அரசாங்கத்திற்கு என்ன உரிமை இருக்கிறது? ஒருவனுக்கு வரும் கடிதங்களைப் பிரித்துப்பார்ப்பது குற்றமென சட்டமேற்படுத்திய சர்க்கார், மற்றவர்க்குவரும் கடிதத்தை ஏன் பிரித்துப் பார்க்க வேண்டும்?—இந்த வாதமே புனிதமான சுதந்திரம் தான் மனித வர்க்கத்திற்கு தேவை தேவை என்று கத்திக்கத்தி தாயகத்து வாலிபர்களிடையே மழுங்கிப் போயிருந்த விடுதலை வேட்கையை கூராக்கிவிட்டு செத்தானே அந்த மாஜினி—சுதந்திரச் சுடர்விளக்கை ஏற்றி வைத்த சுயமரியாதைக்காரன்—அவனுக்காக அவனுடைய அன்னை நாடாம் இத்தாலியிலே தான் முதன்முதலாகப் பிறந்தது. "ஒருவனுக்கு வந்த கடிதத்தை தபாலாபீசினின்று வாங்கிப் பிரித்துப் பார்ப்பது முடிச்சவிழ்பதற்குச்சமம்; போக்கிரிகள்—கொலைகாரர்கள் செயல் அது" என்று எதிர்த்துக்கேட்ட முதல் மனிதனே மாஜீனிதான்.

ஃ ஃ ஃ

'சாவதற்குமுன் நேபல்ஸ் நகரைப் பார்த்துவிடு' -என்று சொல்லுகிறார்களே அங்கு போய் தங்கிவந்தவர்கள், அந்த நேர்த்தி மிக்க நகரத்தை தன் மடியிலேவைத்து வனப்பு சிந்தி வசீகரிக்கும் இத்தாலி தேசம் தான் மாவீரன் மாஜினியின் மாதா பூமி. நூற்றி ஐம்பது ஆண்டுகளுக்குமுன் அரும்பு விட்டு மலர்ந்து, அறுபத்தைந்து ஆண்டுகள் மணம்வீசி சருகாகிப் போன செம்மலர் மாஜினி. உடற்புண்ணை ஆற்றும் வைத்தியப் பரிசோதகருக்குப்பிறந்து, பாதந்தாங்கி வாழ்ந்துவரும் பலஹீன உள்ளங்களுக்கு வீறு தந்து சுயநினைவை ஊறச் செய்த புரட்சிக்காரன் அந்த லட்சிய வாதி. என்று தன்னுட்டைப் பற்றி மாஜினியின் உள்ளத்திலே கவலை பிறந்ததோ, "தேசமென்பது கேவலம், சந்தைக் கூட்டமல்ல; அது ஒரு சமுதாயத்தின் கூட்டமைப்பு தான்" என்று எண்ணத் தொடங்கினனே அன்று முதல் மாஜினி கவலையைக் குறிக்கும் கருப்புச் டையே அணிய ஆரம்பித்தான். இத்தாலியமக்களின் உழைப்பை-இரத்தக் கண்ணீரை-சுவைத்து வாழும் ஆஸ்திரி அரசாங்கத்தை ஒழித்துக் கட்டவேண்டுமென்பதையேஜீவலட்சியமாகக்கொண்டு மாஜினி வெளியிட்ட துண்டுப் பிரசுரங்கள் சரித்திரப் புகழ் பெற்றவை.

"தேசமில்லா மனிதனுக்குபெயரும் கீர்த்தியும், உரிமையும் சகோதர உணர்ச்சியுமில்லை. ஒவ்வொரு இனத்தாரும் அவர்களுக்கென ஒரு நாட்டைத் தேடிக்கொள்வது இயற்கை...... சொந்தநாட்டில் படிப்பில்லாதவன் ஒருவன் இருக்கும் வரை, வேலையின்றிக் கஷ்டப்படுகிறவர்கள் இருக்கும்வரை அது ஒரு நாகரீக நாடாகாது"



இந்த வாக்கியங்கள் தாங்கி வெளிவந்த மாஜினியின் துண்டுப் பிரசுரத்தை தனி அறையில் வைத்துப் படித்துப் பார்க்காத, தக்கார் பலரைக் கூட்டி சதி ஆலோசனை செய்யாத முடியரசே அந்த நாட்களில் இல்லை-இல்லவே இல்லை!

அரசாங்கம், சிலரைப் பெரிய மனிதர்களாக்கிவிடும், சிலரை இதயத்தைக் கொய்து சித்தவியாகூலமுடையவராக்கி விடும். மாஜினி இதிலே இரண்டாம் வகை. மாஜினிக்கு ஆஸ்திரிய அரசாங்கம் தந்த தொல்லை அற்பசொற்பமல்ல. திடீரென்று மாஜினி நாடு கடத்தப்படுவான்-அடுத்த மாதம், இங்கிலாந்திலே 'இளம் இத்தாலிய சங்கம்' நிறுவப்படும்.

மாஜினியின் புகழ் அங்கே குறுத்துவிடும். துண்டுப் பிரசுரங்கள் தெருக்களிலே மிதக்கும். காற்றிலே அடித்து வரப்பட்டு கனவான்களின் மாளிகைகளிலே மோதும். சின்னுட்களிலே, மாஜினி இங்கிலாந்திலே இருக்கமாட்டான்— எப்படியோ அவனை 'வாழப் பிறந்தவர்'கள் வெளியேற்றி விட்டிருப்பார்கள். இப்படி ஒரு முறையா இரு முறையா — பன்முறை! பன்முறை!!

19-ம் நூற்றுண்டில் நாடு கடத்தப்பட்டவர்களெல்லாம் சுவிட்ஸ் நகருக்கு நன்றியைத் தெரிவிக்க மறந்ததில்லை. அந்த நூற்றுண்டில் நாடுகடத்தப்பட்ட புரட்சித் தலைவர்களுக்கெல்லாம் இடமளித்த ஒரே நகரம் சுவிட்சர்லாந்துதான். மாஜினி அங்கிருக்கும்போது பல புரட்சி இயக்க வாதிகள் மாஜினிக்கு அறிமுகமானர்கள். அவர்களில் ஓரிருவர் மாஜினிக்கு உறுதுணையாக இருந்து பணியாற்றியுமிருக்கிறார்கள்,

மாஜினியின் சுவிட்சர்லாந்து வாசம் நீடிக்கவில்லை. அந்த நாட்டின் மீது அந்நிய நாடுகள் வெறுப்புணர்ச்சி காட்டதலைப் பட்டுவிட்டன. இதை உணர்ந்த சுவிட்ஸ் சிங்காதனம் 'பெரிய இடத்துப் பொல்லாப்பு' ஏன் என்று எண்ணிவிட்டது போலும்! இல்லாவிட்டால் மாஜினியையும், மற்றவர்களையும் வெளியேறக் கட்டளை இடுவானேன்!

1848! மிலன் நகரில் பெரிய மாநாடு. தனக்கு அடிமைப்பட்டிருக்கும் மந்தைக் கூட்டம் இவ்வளவுபெரிய மாநாடு நடத்துவதா என்ற ஆணவம் ஆஸ்திரிய அரசங்கத்திற்கு. அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டது. பொதுமக்கள் தாக்கப்பட்டார்கள், குத்தீட்டியும், கூர்வாளும் சதைக்குள் பாயும் பயங்கரக் காட்சி எத்தனையோ பேரை தற்கொலைக்கு ஆளாக்கிவிட்டிருக்கிறது. ஆனுலும் அந்தப் புரட்சியில் மக்களே வாகை சூடினர்கள். மிலன் நகரக் கோட்டையின் உச்சியில் சுதந்திரக் கொடி பறந்தது. அந்த வெற்றிக்குக் காரணம் மாஜினி ஏற்றிய உணர்ச்சி வேகம்தான் என்பதை இத்தாலி ஒப்புக்கொண்டது. கரிபால்டியின் முயற்சியும், விக்டர் எமான் யூலின் திறமையும் ஏகாதிபத்திபத்தின் காவலர்களை மண் கவ்வ வைத்துவிட்டன.

பாவம்! பெரும் புகழும் பெற்ற மாஜினி வாழ்நாளின் இறுதி அத்தியாயம்வரை கட்டுரைகள் எழுதி காலம் கடத்தவேண்டியவனாகத்தானிருந்தான். அவனுக்காக அவனுடைய நலன் விரும்பிகள் சேர்த்த பணமுடிச்சுகளை இத்தாலி சங்கங்களின் வளர்ச்சிக்காகவே தந்து விட்டான் மாஜினி.

ஒருமுறை, இத்தாலிய தத்துவஞானி டாண்டியைப் பற்றி பஸ்காலோ என்பவர்எழுதிய கையெழுத்துப் பிரதி ஒரு கடைக்காரனிடம் இருப்பதை மாஜினி எப்படியோ தெரிந்து கொண்டு விட்டான். கடைக்காரன் சொல்லுகிற விலையோ மாஜினியால் மனதிலே கூட எண்ணிப் பார்த்திட முடியாத தொகை— பக்தர்களைக் கேட்டால் பக்தன் துயரைத்துடைக்க ஆண்டவனே வடி வெடுத்து வந்து விட்டார்

● தொடர்ச்சி 8-ம் பக்கம்

அரசுரிமை!

"அரசுரிமை ஒரு மனிதனுக்குப் பாத்தியதை அல்ல அது மக்களிடத்திலுள்ளது. அவர்களின் கருத்தறிந்தே ஆட்சி நடத்த வேண்டும்"

"ஒரு தேசத்தின் விடுதலைக்கு அந்தத் தேசத்தார்களே பாடுபட வேண்டும். அன்னியஅரசாங்கமொன்றைஒழிக்க இன்னெரு அன்னிய அரசாங்கத்தைத் துணை தேடுவது கூடாது." — மாஜினி.

எதிர்பாராதது

சரவணபவா யூனிட்டி பிச்சர்ஸ் தயாரிப்பான 'எதிர்பாராதது' என்ற தமிழ்படம் வெற்றிகரமாகத் தமிழ் நாட்டில் ஓடிக்கொண்டிருக்கிறது. தொழிலாளர்களின் முயற்சியான இந்தத் தயாரிப்பு பாராட்டுக்குரியது. கதைப்போக்கிலே, சில குறைகள் இருந்தாலும் கூட, பழுத்த பக்த சிரோன்மணி ஒருவர் தள்ளாத வயதிலே, நிம்மதியாக இருப்பதற்காக ஒரு திருமணம் செய்து கொள்கிற நிகழ்ச்சியை சேர்த்து ஆஸ்திகத்தின் அவலக்ஷணப் போக்கை தக்க முறையில் விளக்கி யிருப்பது போற்றத் தகுந்ததாகும்.

பகவான் முன்னே இருக்கும் போது மனம் தூய்மையாக இருக்கிறது. அவர் சன்னிதானத்தை விட்டு வெளியே வந்தால், மனம் நிம்மதியற்றுப் போகிறதாம் அவருக்கு. அதனுல் ஒரு இளம் பெண்ணைத் தழுவி இன்பம் பெற மைனர் வேஷம் போடுகிறார் அந்த முருக பக்தர். கடவுள் பக்தர்களின் போலித்தனத்தை விளக்கும் கதாசிரியர் ஸ்ரீதரின் துணிவைப் பாராட்டத்தான் வேண்டும். படத்தில் நடித்துள்ள சிவாஜி கணேசன், நாகய்யா, மற்றும் பத்மினி முதலியோர் தங்கள் திறமையை பூரணமாக வெளிப் படுத்தி யுள்ளனர்.

ஒருவனிடம் உள்ளத்தைப் பறி கொடுத்த ஒருபெண், இன்னெருவனை மணக்க முன்வரும் போது, அந்தப் புதுக்கணவனின் ஸ்பரிசமே படாத நிலையில் தன் பழைய காதலனை ஏற்றுக் கொள்ள மறுக்கிருள். காரணம்? அந்தத்தாலிதான்—கதாசிரியர், தாலியால் விளையும் தீமைக்கு இந்த சம்பவத்தை எடுத்துக்காட்டாக அமைத்துள்ளளார் போலும். மொத்தத்தில் இந்த முயற்சியை வெற்றிகரமாக்கிய நண்பர்கள், கோவிந்தசாமி (ஒலி) ராமசாமி (ஒளி) சுந்தரம் ஆகியோரை வாழ்த்துகிறோம்.

கடைசிப்பக்கம்

தமிழ்பித்தன்-தாம்பரம்.

(?) பண்டைத் தமிழர்களுக்கு "சுயம்வரம்" என்ற மண முறை இருந்ததா?

'சுயம்வரம்' என்ற பெயரில் இல்லையே தவிர, பழந்தமிழ் பெண்கள், தங்களுக்குரிய வாழ்க்கைத் துணைவர்களைத் தாங்களே தேர்ந்தெடுக்கும் முறை இருந்திருக்கிறது. 'ஏறு தழுவுதல்' என்று ஒரு வீரச் செயல் பழந்தமிழர் காலத்தில் சிறப்பெய்தியிருக்கிறது, வலிவுள்ள காளைகளை அடக்கி வெல்லும் வீரனையே தனது கணவனாகக் கொள்ளும் பழக்கமுடைய மறத்திகள் அக் காலத்தில் மலிந்திருந்தனர். அத்தகையோர் முல்லை நிலத்தில் வாழ்ந்தனர். இந்தச் செய்தி கலித்தொகையில் சொல்லப் படுகிறது. கூர்மையாக கொம்பு சீவப்பட்ட ஏறுகளைத் தழுவி அடக்கி அந்த வெற்றிமாலையோடு ஆடவர். காதலியரைத் தழுவுவார்களாம்.

அந்தக் கொம்புகளைக் கண்டு அஞ்சும் ஆயனை ஆய்ச்சியர் மணக்க விரும்பார். அதற்கு இதோ முல்லைக்கலிப்பாடல்:—

"கோல்லேற்றுக் கோடஞ்சுவானை
மறுமையும்
புல்லாளே ஆயமகள்."

●

வைத்தியநாதன்-திருபெரும்புதூர்.

(?) "தாமரைக் கண்ணன் உலகம், காதலியின் தோளில் துயிலும் சுகத்தை விட மேலானதல்ல என்று திருவள்ளுவர் கூறியதுபோல, அக் காலத்தில் வேறு யாராவது கூறியிருக்கிறார்களா?

கூறியுள்ளனர். குறுந்தொகையில் அப்படி ஒரு பாடல் உண்டு; "எல்லா நாட்களும் பதர் போன்ற பயனற்ற நாட்கள். துணைவியின் தோளில் துயில் கொள்ளும் நாளே இந்த உலகில் வாழும் நாள்" என்று பொருள் தரும் பாடல் ஒன்றிருக்கிறது.

"எல்லாம் எவனோ பதடி
வைகல்!...
அரிவை தோளிணைத் துஞ்சிக்
கழிந்த நாள் இவண் வாழும்
நாளே!"

டி. கே. செந்தில்குமாரன்—
தூத்துக்குடி.

(?) ஒரு எம். எல். ஏ. ஆபாசமான முறையில் பத்திரிகை நடத்துகிறாரே என்று ஆச்சரியப்படுகிறேன்—தங்கள் கருத்தென்ன?

எம். எல். ஏ.—இப்படி ஒரு ஆபாசப் பத்திரிகை நடத்துகிறாரே என்று எனக்கு ஆச்சரியமில்லை. இப்படி ஆபாசப் பத்திரிகை நடத்தும் அவலக்ஷணாங்கள் எல்லாம் எம். எல். ஏ. வாக இருக்கின்றனவே என்றுதான் எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது.

விஜயாதேவி, திருநெல்வேலி

(?) எழுத்தாணியாரே —தங்கள் பெற்றோர்கள் பெயர் என்ன?

முத்துவேலரும், அஞ்சுகத்தம்மாளும் பெற்றெடுத்த புத்திர பாக்கியம் அம்மா நான்!

சந்தேகி—சென்னை.

(?) ஒரு சினிமா படத்தில், அடுக்குச் சொற்களால் வசனம் எழுதும் முறையைக் கேலி செய்து விட்டு, அந்த ஆசிரியர் படம் முழுவதும் அடுக்குச் சொற்களைத் தேடித்தேடி அர்த்த மற்ற வகையில் எல்லாம் வாக்கியங்களை அமைத்திருக்கிறாரே--காரணம் என்ன?

அர்த்தமில்லாத அடுக்குத் தொடர்களையும், ஜீவனில்லாத வார்த்தைக் குவியல்களையும், பொருளற்ற வர்ணனைகளையும் நாமுந்தான் கண்டிக்கிறோம். ஆனால், தாங்கள் கூறும் ஆசிரியரைப் போல எரிச்சல் கொண்ட உள்ளத்தோடு எழுதுகோலைத் தூக்குவதில்லை. எரிச்சலின் உச்சக்கட்டந்தான் அவர்கள் ங்களைத் தாங்களே தாக்கிக் கொண்டு முன்னுக்குப்பின் முரணாக எழுதுகிற எதிர்பாராத சம்பவங்களாகும்.

மதனகோபால்—தேவநகர்.

(?) படிப்பறிவுக்கும், பகுத்தறிவுக்குமுள்ள வித்தியாசமென்ன?

சாணைக்கல்லுக்கும், கத்திக்குமுள்ள வித்தியாசம் தான்.

மார்த்தாண்டன்-திருச்சி டவுன்.

(?) ராமாயண எதிர்ப்பு பிரச்சாரத்திற்கு அணைபோட முயலுகிறார்களே; அவர்கள் எல்லாம் யார்?

அணை போடுகிறவர்கள் யார்? இராமன் காலத்தில் பாலம் போட்டார்கள் என்று கூறுகிறார்களே; அவர்கள் பரம்பரைதான்!

எம். ஆர். ராதாகிருஷ்ணன்.

(?) "புதையலை" நான்கு பக்கங்களில் வெளியிட்டால் என்ன?

இதற்கு, முன்பே பதில் கூறியிருக்கிறோம். விரைவில் சிறிய எழுத்துக்களில் வெளியிட முயலுகிறோம், தோழரே!

ஜார்ஜ் அருள்தாஸ்—பங்களூர் 2.

(?) பிரஜா சோஷலிஸ்ட் கட்சியின் எதிர்காலம் எப்படியிருக்கும்?

நிகழ் காலத்தைப் போலவே அதன் எதிர்காலமும் இறந்த கால மாயிருக்கும்.

கே. எஸ். திருசங்கு-
கோங்கரப்பட்டு.

(?) ஆண்டவனை நோக்கி அடிக்கடி பிரார்த்தனை செய்யும் மனித சமூகத்திற்கு அவர் விடை அளித்ததாக உலக வரலாற்றில் ஆதாரம் உண்டா?

உடுமலை நாராயணகவி ஒரே வரியில் கூறி விட்டாரே; ஆண்டவன் ஆகாசமதில் தூங்குகிறார் என்று!

இடமாற்றம்

டிசம்பர் 15-முதல் முரசொலி அலுவலகம் கீழ்க்கண்ட முகவரிக்கு மாற்றப்பட்டிருக்கிறது.

ஆசிரியருக்குக் கடிதம் எழுதும் தோழர்கள் இந்த முகவரிக்கே எழுதுக:

**4/128, மவுண்ட் ரோடு,
சென்னை-6**

★ முரசொலி ★
பொங்கல் மலர்

★

★ "பொங்கல் மலர் வருகிறது, என்ற சுவரொட்டிகளைப் பார்ப்பதிலேயே ஒரு தனி இன்பம் காணுகிறோம்" என்று பாசமுள்ள தோழர்கள் பலர் கடிதம் எழுதியிருக்கிறார்கள். இலட்சியக் கொடியின் வண்ணத்தோடு திகழும் முரசொலியின் பொங்கல் மலர் தெவிட்டாத தேன் விருந்தாகத் திகழ முடிந்ததெல்லாம் செய்யுங்கள் என்று உற்ற நண்பர்கள் உரைத்த வண்ணமிருக்கிறார்கள். இந்த நல்வாழ்த்துக்கள் நமக்கு மேலும் மேலும் உற்சாகத்தை அளிக்கின்றன.

★ திராவிடத்துக் கவிஞர் பெருமக்களின் எழுத்தோவியங்கள்,

★ தமிழ் மேதைகள் தரும் இலக்கிய விருந்துகள்.

★ முன்னணி ஓவியர்கள்தரும் வண்ணச்சித்திரங்கள்

★ நடிக நண்பர்கள் — கலைவாணர்கள் எழுதும் சிறப்புக் கட்டுரைகள்.

இன்னும் பல புதிய பகுதிகளுடன் மலர் வரும். தம்பி, தங்கைகளுக்கு ஒரு இன்பச்சேதி—**பிறைவானம்** மலரில் ஒரு தனிப்பகுதியாகத் திகழும்.

விலை ரூபாய் 2

இன்றே உங்களூர் விற்பனையாளரிடம் பதிவு செய்து கொள்ளுங்கள்.

சந்தாதாரர்கள் ரூ 2—4—0 அனுப்பி வைத்தால் மலர் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்-